

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 82 – ஒலி: 46 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – புரட்டாசி 07 – ஞாயிற்றுக்கிழமை 24 செப்டம்பர் 2023 – வெளியூர் 10+ 8 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 82 - Issue 46: Thiruvalluvar Year - 2054 - Purattasi 07 - Sunday 24 September 2023 - Dak 10+8 Pages ₹5.00

## CAG எழுப்பிய 7.5 லட்சம் கோடி ரூபாய் முறைகேடுகள்!

# பிரதமர் மோடி மவுனம் ஏன்?

## "Speaking for India" பாட்காஸ்ட் - 2ல் முதல்வர் மு.க.ஸ்டாலின் கேள்வி!




திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், "CAG எழுப்பிய 7.5 லட்சம் கோடி ரூபாய் முறைகேடுகளும் பிரதமரின் மவுனமும்" என்ற தலைப்பில் தமிழ், இந்தி, மலையாளம், கன்னடம், தெலுங்கு ஆகிய மொழிகளில் நேற்று (23.09.2023) Speaking for India பாட்காஸ்ட் சீரிசின் இரண்டாவது அத்தியாயத்தை வெளியிட்டு உரையாற்றினார். (அப்போது முதல்வர் அவர்கள் தென்னிந்திய மொழிகளில் சில நொடிகள் பேசினார்). முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

இந்த Speaking for India பாட்காஸ்ட்டின் முதல் எபிசோடுக்குப் பிறகு, கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் தொடக்கம் – திராவிட முன்னேற்றக் கழகத்தின் பவள விழா தொடக்கம் ஆகியவற்றை முடித்துவிட்டு, இப்போது உங்களிடம் பேசுகிறேன்.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் தொடங்கிய உடன், சமூக வலைத்தளத்தில் வந்த ஒரு பதிவை உங்களிடம் பகிர்ந்து கொள்கிறேன். ஒரு தாய்மார் கேட்கிற மாதிரியான பதிவு அது, "எங்க முதல்வர் சொன்ன ஆயிரம் ரூபாய் வந்தாச்சு, பிரதமர் சொன்ன 15 லட்சம் என்னாச்சு?" இது தமிழ்நாட்டில் வைரல் ஆகிவிட்டது.

நம்முடைய நாடும் – நாட்டு மக்களும் மீண்டும் பா.ஜ.க.விடம் ஏமாந்துவிடக் கூடாது என்றுதான் இந்த Speaking For India பாட்காஸ்ட் சீரிஸ்-ஐ தொடங்கியிருக்கிறேன்.

**2014-ஆம் ஆண்டு ஏமாந்தது போல் -**

**2019-ஆம் ஆண்டு ஏமாந்தது போல் -**

**2024-ஆம் ஆண்டும் நாடு ஏமாந்து விடக் கூடாது.**

2014ஆம் ஆண்டு ஆட்சிக்கு வருவதற்கு முன்பு – குஜராத் மாநிலத்தை முன்னேற்றி – அங்கே தேனாறும் – பாலாறும் ஓடுவதுபோல பொய்ச் செய்திகளை பரப்பி – அதன் மூலமாக, தன்னை வளர்ச்சியின் நாயகனாக காட்டிக் கொண்டார் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள்.

### இந்தியாவை வளர்ச்சி மிகுந்த நாடாக மாற்றிவிட்டாரா?

"60 ஆண்டுகள் இந்தியாவை காங்கிரஸ் கட்சி ஆட்சி செய்திருக்கிறது. எனக்கு 60 மாதம் கொடுங்கள். நான் இந்தியாவை வளர்ச்சி மிகுந்த நாடாக மாற்றுவேன்" – என்று சொன்னார் மோடி அவர்கள். அவருக்கு 60 மாதம் மட்டுமில்லை – கூடுதலாக, இன்னொரு 60 மாதம் ஆட்சி செய்கிற அளவிற்கு வாய்ப்பை இந்திய மக்கள் வழங்கினார்கள். வளர்ச்சி மிகுந்த நாடாக மாற்றிவிட்டாரா? என்பதுதான் அவர் பதில் சொல்ல வேண்டிய கேள்வி. எந்த வகையில் எல்லாம் இந்தியாவை வளர்த்திருக்கிறார் என்று பட்டியல் போட அவரால் முடியுமா?


### 5 T-க்கள் என்ன ஆச்சு?

**5 T-தான் எனக்கு முக்கியம் என்று முதல் முறை பிரதமர் ஆனபோது நரேந்திரமோடி அவர்கள் சொன்னார்.**


1. Talent - **திறமை,**
2. Trading - **வர்த்தகம்,**
3. Tradition - **பாரம்பரியம்,**
4. Tourism - **சுற்றுலா,**
5. Technology - **தொழில்நுட்பம்**

### பிரதமரின் 5 T-க்கள் என்ன ஆச்சு ?

1. Talent - **திறமை,**





2. Trading - **வர்த்தகம்,**





3. Tradition -**பாரம்பரியம்,**




4. Tourism - **சுற்றுலா,**




5. Technology - **தொழில்நுட்பம்**




### 5 C-க்களாக மாறிப்போச்சு!


1. Communalism - **வகுப்புவாதம்,**




2. Corruption - **ஊழல் முறைகேடுகள்,**




3. Corporate Capitalism - **மூலதனக் குவியல்,**




4. Cheating - **மோசடி,**




5. Character Assassination - **அவதூறுகள்**




**- இந்த 5 T-யில் ஒன்றாவது நிறைவேற்றப் பட்டிருக்கிறதா? என்னைப் பொறுத்தவரையில், 5 C-க்கள் கொண்டதாகத்தான் இன்றைய பா.ஜ.க. ஆட்சி இருக்கிறது.**

1. Communalism- **வகுப்புவாதம்,**
2. Corruption **ஊழல் முறைகேடுகள்,**
3. Corporate Capitalism **மூலதனக் குவியல்,**
4. Cheating - **மோசடி,**
5. Character Assassination **அவதூறுகள்**

- இந்த 5 C-க்கள் கொண்ட ஆட்சி இது. இப்படித்தான் சொல்ல முடியும். இதை இது வரை விளம்பர வெளிச்சங்கள் மூலமாக பா.ஜ.க. மறைத்து வந்தது. ஆனால் இப்போது உருவான இந்தியா கூட்டணியும், இந்தியா கூட்டணித் தலைவர்களின் பரப்புரையும் பா.ஜ.க. கட்சியின் முகத்திரையை – பிரதமர் நரேந்திர மோடி என்ற பிம்பத்தைக் கிழித்துவிட்டது.

### அம்பலப்படுத்திய சி.ஏ.ஜி. அறிக்கை?

"இதை நாங்கள் அரசியலுக்காகச் சொல்லவில்லை. உண்மையான தரவுகளின் அடிப்படையில்தான் சொல்கிறோம்!" என்று சி.ஏ.ஜி. அறிக்கை அம்பலப்படுத்தி விட்டது.

இந்தியா கூட்டணியைப் பார்த்து, ஊழல்வாதிகளின் கூட்டணி என்று குற்றம்சாட்டுகிற மோடி அவர்களே! உங்கள் ஆட்சியைப் பற்றி சி.ஏ.ஜி. அறிக்கை என்ன சொல்லியிருக்கிறது என்று படித்துப் பார்த்தீர்களா? இதைப் பற்றி சிறப்புக் கூட்டத் தொடரில் விவாதித்தீர்களா? இல்லை பதில் சொன்னீர்களா?

'அயோத்தியா' திட்டத்தில்கூட ஊழல் செய்த கட்சிதான் பா.ஜ.க. என்று சி.ஏ.ஜி. அறிக்கை சொல்லியிருக்கிறது. எல்லாத் திட்டங்களுக்கும், நம்முடைய வாய்க்குள் நுழையாத பெயராகப் பார்த்து வைப்பார்கள். அப்படி வைத்தால்தான் அதில் என்ன நடக்கிறது என்று யாராலும் கண்டுபிடிக்க முடியாது.

அதாவது இராமாயணம் நடந்த இடங்களுக்கு எல்லாம் பயணிகளை அழைத் துச் செல்லும் சுற்றுலாத் திட்டம் அது. இதை உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், இமாச்சலப் பிரதேசம், சிக்கிம், கோவா, தெலங்கானா ஆகிய 6 மாநிலங்களில் செயல்படுத்தப்போவதாகச் சொன்னார்கள்.

இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தியதில், பல கோடி ரூபாய் வீணடிக்கப்பட்டுள்ளதாக




சி.ஏ.ஜி. குற்றம் சாட்டி இருக்கிறது. ஒப்பந்தம் வழங்கியதில் எத்தகைய விதிமீறல்கள் இருக்கிறது என்று இந்த அறிக்கை சொல்லியிருக்கிறது.

### மிகப்பெரிய பீடிகையோடு தொடங்கப்பட்ட 'உதான் திட்டம்' என்ன ஆச்சு?

* அடுத்து, பா.ஜ.க. அறிவித்ததை நிறைவேற்றாது என்பதற்கு சி.ஏ.ஜி. அறிக்கை ஒரு எடுத்துக்காட்டைச் சொல்லியிருக்கிறது. அதுதான் 'உதான்' திட்டம். மிகப்பெரிய பீடிகையோடு இந்தத் திட்டத்தைத் தொடங்கினார்கள். ஏழைகள் விமானத்தில் பயணிக்கலாம், நடுத்தர நகரங்களிலும் விமான நிலையம் அமைக்கப் போகிறோம் என்று சொல்லி 2016ஆம் ஆண்டு தொடங்கிய திட்டம் இது.

'உதான்' திட்டத்திற்காக ஒன்றிய அரசு 1,089 கோடி ரூபாயை ஒதுக்கியது. திட்டமிடப்பட்ட 774 வழித்தடங்களில் விமானச் சேவை வழங்க முடிவு செய்ததில் 7 விழுக்காடு தடங்களில் மட்டுமே விமானங்கள் இயக்கப்படுகிறது. 93 விழுக்காடு தடங்களில் விமானங்கள் இயக்கப்படவில்லை.

எடுத்துக்காட்டாக, தமிழ்நாட்டில் சேலம், தஞ்சாவூர், இராமநாதபுரம், வேலூர் நகரங்களுக்கு 'உதான்' திட்டத்தில் விமானச் சேவை அறிமுகப்படுத்தத் திட்டமிடப்பட்டது. ஆனால், திட்டமிடப்பட்ட இந்த 4 நகரங்களில் சேலத்திற்கு மட்டும்தான் 'உதான்' திட்டத்தில் விமானம் இயக்கப்பட்டது. அதுவும் இப்போது இல்லை.

மொத்தமாக அறிவிக்கப்பட்ட 774 வழித்தடங்களில் 720 வழித்தடங்களுக்கு விமானங்கள் இயக்கப்படவில்லை என்று சி.ஏ.ஜி அறிக்கை சொல்லியிருக்கிறது.

### விளம்பரங்களால் பொய் பிம்பத்தைக் கட்டமைத்த பா.ஜ.க. அரசு!

* அடுத்து இரயில்வே துறை. 2021-2022ஆம் ஆண்டில் இரயில்வே துறை, 100 ரூபாய் வருவாய் ஈட்டுவதற்காக 107 ரூபாய் செலவழித்து இருப்பதாகவும், இதனால் இந்திய இரயில்வேயின் நிதிநிலை கவலைக்குரியதாக மாறிவிட்டதாகவும் சி.ஏ.ஜி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

* அடுத்து, நாம் அடிக்கடி சொல்கிற, விளம்பரங்களால் பொய் பிம்பத்தைக் கட்டமைத்திருக்கும் பா.ஜ.க. அரசு என்று;

தொடர்ச்சி 2 ஆம் பக்கம்



## "அயோத்தியா திட்டம் முதல் ஆயுஷ்மான் பாரத் திட்டம்" வரை அனைத்திலும் ஊழல்!



# "இந்த M.K.STALIN குரலை இந்தியாவின் குரலாக எல்லோரிடமும் கொண்டு செல்லுங்கள்!"

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்!... முதல்பக்கத் தொடர்ச்சி

அந்த விளம்பரங்களுக்கு என்ன செய்திருக்கிறார்கள் தெரியுமா?

ஒன்றிய அரசின் பல்வேறு ஓய்வூதியத் திட்டங்களில் 2017 முதல் 2021-ஆம் ஆண்டு வரை ஒதுக்கப்பட்ட நிதி, ஒன்றிய அரசின் விளம்பரங்களுக்குப் பயன்படுத்தப்பட்டு முறைகேடு நடந்திருக்கிறது என்று அம்பலப்படுத்தப்பட்டிருக்கிறது.

**டோல் பிளாசாவில் லட்சக்கணக்கில் முறைகேடு?**

இந்த முறைகேடுகளுக்கெல்லாம் உச்சம், 'டோல் பிளாசா' முறைகேடு தான். பயணம் செய்யும் பொது மக்களிடம் 'டோல் பிளாசா' மூலமாக, நாள்தோறும் மாபெரும் மோசடியான வசூல் நடந்திருக்கிறது.

5 'டோல் பிளாசா'க்களைமட்டும்தணிக்கை செய்ததில், விதிகளுக்குப் புறம்பாக, வாகன ஓட்டிகளிடம் இருந்து ரூ.132 கோடியே 5 லட்சம் ரூபாயை தேசிய நெடுஞ்சாலை ஆணையம் வசூலித்து இருப்பதாக சி.ஏ.ஜி. அறிக்கை குற்றம் சாட்டியிருக்கிறது.

அவ்வாறு பார்த்தால் இந்தியா முழுவதும் எத்தனை 'டோல் பிளாசா'க்கள் இருக்கின்றன. அதன் மூலமாக எத்தனை லட்சம் கோடி ரூபாய் முறைகேடாக வசூலாகி இருக்கும் என்று கொஞ்சம் கணக்கிட்டுப் பாருங்கள்.

★ அடுத்து, நாடு முழுவதும் இருக்கும் சாலைகளை இணைக்க 'பாரத்மாலா' என்ற திட்டத்தை 2015ஆம் ஆண்டு கொண்டு வந்தார்கள். அதில், ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்கு ரூ. 15 கோடியே 37 லட்சம் என்பதை, ரூ. 32 கோடியே 17 லட்சமாக ஆக்கி ஒப்பந்தம் போட்டிருக்கிறார்கள். இந்த 8 ஆண்டு காலத்தில் 13 ஆயிரம் கிலோ மீட்டருக்குத்தான் சாலை போடப்பட்டிருக்கிறது. 40 விழுக்காடு கூட வேலைகள் முடியவில்லை.

★ இதேபோல், "துவாரகா விரைவு நெடுஞ்சாலை" திட்டம், 'பாரத்மாலா பரியோஜனா'-1 என்ற திட்டத்திலும் முறைகேடுகள் நடந்திருக்கிறது. திட்டமிட்ட மதிப்பைவிட 1,278 மடங்கு கூடுதல் தொகை செலவிடப்பட்டிருக்கிறது.

**'ஆயுஷ்மான் பாரத்' திட்டத்தில் பல கோடி ரூபாய் முறைகேடு?**

★ அடுத்து, சுகாதாரத் துறை. இந்தியாவிற்கே முன்னோடியாக 'கலைஞர் காப்பீட்டுத் திட்டம்' தமிழ்நாட்டில்தான் 2009-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. கிட்டத்தட்ட 9 ஆண்டுகள் கழித்து, 2018-இல் பிரதமர் மிகப் பிரமாண்டமாக அறிவித்த திட்டங்களில் ஒன்று, 'ஆயுஷ்மான் பாரத்' திட்டம். ஏழைக் குடும்பங்களுக்கு 5 லட்சம் ரூபாய் வரை காப்பீடு வழங்கப்படுவதாக பா.ஜ.க. சொல்கிறது.

'ஆயுஷ்மான்பாரத்'திட்டத்தின் கீழ் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று இறந்த நோயாளிகளுக்கு, இறந்த பின்பும், சிகிச்சை அளிக்கப்படுவதாகச் சொல்லி, காப்பீட்டுக் கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு, காப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டிருக்கிறது.

ஒரே நேரத்தில், ஒரு நோயாளி பல மருத்துவமனைகளில், அனுமதிக்கப்பட்டிருப்பதாக கணக்குக் காட்டுவது, ஒரே ஆதார் நம்பரை பலருக்கும் கொடுப்பது, ஒரே ஃபோன் நம்பரை பலரும் பதிவு செய்வது, ஏன், ஃபோன் நம்பரே கொடுக்காமல் பதிவு செய்வது என்று எக்கச்சக்கமாக முறைகேடுகள் நடந்திருக்கிறது. எத்தனை பேர் - எத்தனை கோடி என்று தனித்தனி நம்பர்களாகச் சொன்னால், கேட்கும் எல்லோருக்கும் தலையே சுற்றிவிடும்!

**மக்களை திசைதிருப்ப முயலும் மோடி?**

இவ்வாறு, 'அயோத்தியா' திட்டம் முதல் 'ஆயுஷ்மான் பாரத்' திட்டம் வரை என்று எல்லாவற்றிலும், 7.5 லட்சம் கோடி ரூபாய் முறைகேடு நடந்திருப்பதாக சி.ஏ.ஜி. அளவிட்டிருக்கிறார்கள். இதுவரைக்கும் இதற்கு பிரதமரோ - சம்பந்தப்பட்ட ஒன்றிய அமைச்சர்களோ பதில் சொல்லவில்லை. அவர்களால் பதில் சொல்லவும் முடியாது. அதனால்தான் இதில் இருந்து மக்களை திசைதிருப்ப வெவ்வேறு அரசியலை கையில் எடுக்கிறனர்.


ஆனால், ஏழை, எளிய - பிற்படுத்தப்பட்ட - பட்டியலின - பழங்குடியின - மக்களுக்கு விரோதமாகச் செயல்பட்டு வருபவர்தான் நரேந்திர மோடி என்று, இப்போது நாட்டு மக்கள் நன்றாக உணர்ந்து விட்டார்கள். இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலும் - சமீபத்தில் நடந்த இடைத்தேர்தலிலும் பா.ஜ.க. வீழ்த்தப்பட்டிருப்பதே, இதற்கான அடையாளம்.

2024 தேர்தலில், பா.ஜ.க. ஒட்டுமொத்தமாக வீழ்த்தப்பட வேண்டும். பா.ஜ.க.வின் வகுப்புவாத - ஊழல் - கார்ப்பரேட் அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைக்க இந்திய நாட்டு மக்கள் அனைவரும் ஒரே குரலாக முழங்க வேண்டும். பரந்து விரிந்த நம் இந்திய நாட்டைக் காப்பாற்றுகிற கடமை, நம் எல்லோரின் கையிலும்தான் இருக்கிறது!

இந்த M.K.STALIN குரலை, இந்தியாவின் குரலாக எல்லோரிடமும் கொண்டு செல்லுங்கள் என்று உங்கள் எல்லோரையும் கேட்டுக் கொள்கிறேன்.

தொடர்ந்து இந்தியாவுக்காகப் பேசுவோம்! இந்தியாவைக் காப்போம்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.




**'அயோத்தியா' திட்டம் முதல் 'ஆயுஷ்மான் பாரத்' திட்டம் வரை என்று எல்லாவற்றிலும், 7.5 லட்சம் கோடி ரூபாய் முறைகேடு நடந்திருப்பதாக சி.ஏ.ஜி. அளவிட்டிருக்கிறார்கள். இதுவரைக்கும் இதற்கு பிரதமரோ - சம்பந்தப்பட்ட ஒன்றிய அமைச்சர்களோ பதில் சொல்லவில்லை. அவர்களால் பதில் சொல்லவும் முடியாது. அதனால்தான் இதில் இருந்து மக்களை திசைதிருப்ப வெவ்வேறு அரசியலை கையில் எடுக்கிறனர்.**







## முறைகேடுகளின் உச்சம் 'டோல் பிளாசா'!




> **"2024 தேர்தலில், பா.ஜ.க. ஒட்டுமொத்தமாக வீழ்த்தப்பட வேண்டும். பா.ஜ.க.வின் வகுப்புவாத - ஊழல் - கார்ப்பரேட் அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைக்க இந்திய நாட்டு மக்கள் அனைவரும் ஒரே குரலாக முழங்க வேண்டும். பரந்து விரிந்த நம் இந்திய நாட்டைக் காப்பாற்றுகிற கடமை, நம் எல்லோரின் கையிலும்தான் இருக்கிறது!"**




# வகுப்புவாத - ஊழல் - கார்ப்பரேட் அரசியலில் ஈடுபடும் பா.ஜ.க.விற்கு முற்றுப்புள்ளி வைத்திடுவீர்!

### சிலம்பொலி செல்லப்பன் - தமிழ்ப் பற்றாளராக வளர்வதற்கு திராவிட இயக்கமே காரணம்! புலமைத்திறன் - சொல்லாட்சி -

# தமிழ் உரிமைக்காகப் போராடும் உணர்ச்சி ஒருங்கே பெற்றவர், சிலம்பொலியார்!

## நாமக்கல்லில் சிலம்பொலியார் திருவுருவச் சிலை! காணொலி வாயிலாகத் திறந்து வைத்து - முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

**சென்னை, செப். 24-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று (23.9.2023) முகாம் அலுவலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக, நாமக்கல், சேந்தமங்கலம் சாலை, கொண்டம்பட்டிமேடு, சிலம்பொலியார் நகரில் சிலம்பொலி செல்லப்பன் சிலப்பதிகார அறக்கட்டளையின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள மூத்த தமிழறிஞர் சிலம்பொலி செல்லப்பன் அவர்களின் திருவுருவச்சிலை மற்றும் அறிவகம் ஆகியவற்றைத் திறந்து வைத்து உரையாற்றுகையில், "சிலம்பொலி செல்லப்பன் அவர்கள், தமிழ்ப் பற்றாளராக வளர்வதற்கு திராவிட இயக்கமே காரணம்" என்றும், "புலமைத்திறன், சொல்லாட்சி, தமிழ் உரிமைக்காகப் போராடும் உணர்ச்சி ஒருங்கே பெற்றவர், சிலம்பொலியார்!" என்றும் குறிப்பிட்டார்.**



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (23.9.2023) முகாம் அலுவலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக – நாமக்கல், சேந்தமங்கலம் சாலை, கொண்டம்பட்டிமேடு, சிலம்பொலியார் நகரில் சிலம்பொலி செல்லப்பன் சிலப்பதிகார அறக்கட்டளையின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள மூத்த தமிழறிஞர் சிலம்பொலி செல்லப்பன் அவர்களின் திருவுருவச்சிலை மற்றும் அறிவகம் ஆகியவற்றைத் திறந்து வைத்தார். இவ்விழாவில், வனத்துறை அமைச்சர் மரு. மா. மதிவேந்தன், நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஆர்.என்.ராஜேஷ்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் பி.இராமலிங்கம், கு.பொன்னுசாமி, கொங்குநாடு மக்கள் தேசியக் கட்சியின் தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான ஈ.ஆர்.ஈஸ்வரன், பிஜிபி குழுமத்தின் தலைவர் டாக்டர் பழனி ஜி.பெரியசாமி, புலவர் தமிழமுதன், தமிழ்ப் பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் முனைவர் ம.இராசேந்திரன், தமிழறிஞர் முனைவர் மறைமலை இலக்குவனார், எஸ்.எம்.மதுரா செந்தில், சிலம்பொலி செல்லப்பன் சிலப்பதிகார அறக்கட்டளையின் தலைவர் செ.கொங்குவேள், அறக்கட்டளையின் நிர்வாகிகள் மற்றும் தமிழறிஞர் சிலம்பொலி செல்லப்பன் அவர்களின் குடும்பத்தினர்கள் கலந்து கொண்டனர்.

முதல்வர் அவர்கள் காணொலி வாயிலாக ஆற்றிய உரை வருமாறு:-

செல்லப்பன் என்ற பெயரே மறைந்து 'சிலம்பொலி', 'சிலம்பொலியார்' என்று அழைக்கப்பட்டவர்தான் தமிழறிஞர் சிலம்பொலி செல்லப்பனார் அவர்கள்.

**'சிலம்பொலியார்' என - கலைஞரால் அன்போடு அழைக்கப்பட்டவர்!**

அவரது உரையைக் கேட்டு, செல்லப்பன் என்ற பெயரை 'சிலம்பொலி செல்லப்பன்' என அழைக்கத் தொடங்கினார் 'சொல்லின் செல்வர்' இரா.பி. சேதுப்பிள்ளை அவர்கள். சொல்லின் செல்வரின் வாக்குதான் பலித்தது. வாழ்நாள் முழுவதும் சிலம்பொலியாராகவே வாழ்ந்தார்.

சிலம்பொலியார் என்று தலைவர் கலைஞர் அவர்களால் அன்போடும் பாசத்தோடும் அழைக்கப்படக் கூடியவரின் சிலையைத் திறந்து வைக்கும் வாய்ப்பைப் பெற்றமைக்காக உள்ளபடியே நான் பெருமை அடைகிறேன்.

- ❖ தமிழ்நாடு எங்கும் சுற்றிச் சுழன்று, சிலப்பதிகாரத்தின் மாண்பினையும் செந்தமிழின் மேன்மையையும் திறம்பட முழங்கி வருபவர் என்றும்,
- ❖ சீரிய செயல் புரியும் நண்பர் என்றும்,
- ❖ இளங்கோவடிகளின் செந்தமிழ்க் காப்பியத்தில் மூழ்கித் திளைத்தவர் என்றும்,
- ❖ முத்துக்குளித்து அதில் நல்ல சிப்பிகளை மேலே கொண்டு வந்து கருத்தோவியம் படைத்தவர் என்றும், தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்தான், சிலம்பொலியார் அவர்கள்.

எப்போது பார்த்தாலும் முகம் மலர்ந்த சிரிப்புடன் இருக்கும் சிலம்பொலியாரைச் சிலையாகப் பார்க்கும்போதும், நேரில் பார்ப்பதைப் போன்றே இருக்கிறது!

சிலம்பொலியார் எழுதிய 'சிலம்பொலி' என்ற புத்தகத்தை 1975-ஆம் ஆண்டு முதலமைச்சர் கலைஞர் அவர்கள்தான் சென்னையில் வெளியிட்டார். "எல்லோரும் ஆராய்ச்சி செய்து பட்டம் பெறுவார்கள். செல்லப்பன்தான் 'சிலம்பொலி' என்ற பட்டத்தைப் பெற்ற பிறகு, ஆராய்ச்சி நூலை வெளியிட்டு இருக்கிறார்" என்று சொன்னார் கலைஞர் அவர்கள்.

அன்று, சிலம்பொலி புத்தகத்தை வெளியிட்டவர் கலைஞர் அவர்கள். இன்று, சிலம்பொலியார் சிலையை நான் திறந்து வைக்கிறேன். இது எனக்குக் கிடைத்த பெருமை!

**தமிழ்ப் பற்றாளராக வளர்ந்திட திராவிட இயக்கமே காரணம்!**

எளிய வேளாண் குடும்பத்தில் பிறந்து வாழ்நாளெல்லாம் தமிழை விளைவித்த, 'தமிழ் உழவர்'தான் நம்முடைய சிலம்பொலியார் அவர்கள். பள்ளி ஆசிரியராக வாழ்க்கையைத் தொடங்கி - பள்ளித் தலைமை ஆசிரியர் - மாவட்டக் கல்வி அலுவலர் - தமிழ் வளர்ச்சி இயக்குநர் - உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் என வளர்ந்தார்.

கல்லூரியில் B.A., கணக்கு பாடம் படித்தாலும், இவர் தமிழ்ப் பற்றாளராக வளர்வதற்கு திராவிட இயக்கம் காரணமாக அமைந்துள்ளது. தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம், குன்றக்குடி அடிகளார், தலைவர் கலைஞர் ஆகியோரின் உரைகளைக் கல்லூரிக் காலத்தில் கேட்டு உணர்ச்சி பெற்றார்.

குறிப்பாக, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் கவிதைகள்தான், இவரது தமிழ் ஒலிக்கு மிக முக்கியமான காரணமாக அமைந்துள்ளது.

திருச்சி நேஷனல் கல்லூரியில் படித்துக் கொண்டு இருந்த காலத்தில் 'இந்தி இந்நாட்டுக்கு பொதுமொழியாக இருக்கலாமா?' என்ற விவாதத்தில் கலந்து, 'இருக்கக் கூடாது' என்று பேசினார். கல்லூரிப் படிப்பைப் பற்றிக் கவலைப்படாமல் இத்தகைய உணர்ச்சியைப் பதிவு செய்தார்.

**உலகத் தமிழ் மாநாடு! பேரறிஞர் அண்ணா வழங்கிய பெரும் பொறுப்பு!**

ஆசிரியராகப் பணியாற்றத் தொடங்கி மாவட்டக் கல்வி அலுவலராக உயர்ந்தார் சிலம்பொலியார் அவர்கள். 1967-ஆம் ஆண்டு கழக ஆட்சி அமைந்தபோது, பேரறிஞர் அண்ணா அவர்கள் இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டை சென்னையில் நடத்தினார்.

அப்போது மாநாட்டுத் தனி அலுவலராக சிலம்பொலியார் அவர்களைத்தான் முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள் நியமித்தார். உலகத் தமிழ் மாநாட்டு மலரை உருவாக்கும் பொறுப்பும் அவருக்குத்தான் தரப்பட்டது.

**அரசு நிர்வாகம் பற்றி அறவே அறிந்திராத ஆளுநர்கள்!**

தமிழ் வளர்ச்சித் துறை உதவி இயக்குநராக இவர் பணியாற்றிய போது, இயக்குநர் பதவிக்கு இவர் விண்ணப்பிக்கவில்லை. "ஏன் விண்ணப்பிக்கவில்லை?" என்று கேட்டவர் அன்றைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள். 1976-ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்ட போது, சிலம்பொலியாரைப் பழிவாங்கும் நோக்கத்துடன் தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் பொறுப்பில் இருந்து தகுதி இறக்கம் செய்து, பள்ளித் தலைமை ஆசிரியர் ஆக்கியது அன்றைய கவர்னர் ஆட்சி. அந்தக் காலம் முதல் இந்தக் காலம் வரை கவர்னர் ஆட்சி என்றால் இப்படித்தான் நிர்வாகம் தெரியாமல் நடந்துள்ளது. 1989-ஆம் ஆண்டு கழக ஆட்சி மீண்டும் மலர்ந்ததும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநராக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் நியமித்தார்.

**ஆயிரம் நூல்களுக்கு அணிந்துரை வழங்கிய ஆற்றலாளர்!**

பள்ளி ஆசிரியராக இருந்தாலும் - தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநராக இருந்தாலும் - தமிழ்நாட்டு மேடைகளில் சிலம்பொலிக்காமல் இருந்தது இல்லை செல்லப்பனார். பழங்காலப் புலவர்களைப் போலவே புலமைத் திறனும், சொல்லாட்சியும், அதேநேரத்தில் தமிழ் உரிமைக்காகப் போராடும் உணர்ச்சியும் ஒருங்கே பெற்றவர் நம்முடைய சிலம்பொலியார் அவர்கள்.

- ❖ ஆயிரம் நூல்களுக்கு அணிந்துரை வழங்கி இருக்கிறார்.
- ❖ சங்க இலக்கியம், சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற தமிழ் இலக்கியங்களைத் தொடர் சொற்பொழிவாக நடத்தியிருக்கிறார்.
- ❖ புலவர் குழந்தையின் புரட்சி இலக்கியமான இராவண காவியத்தைத் தொடர் சொற்பொழிவாற்றிய பெருமையும் இவருக்குத்தான் உண்டு.
- ❖ 55 ஆண்டுகளாக 4 ஆயிரம் இலக்கியக் கூட்டங்களில் பங்கெடுத்து உரையாற்றி இருக்கிறார்.
- ❖ எந்தப் பாடலைப் படித்தாலும் மனப்பாடமாக ஒப்பிக்கும் ஆற்றல் அவருக்கு இருந்தது.
- ❖ தனது நூலகத்தில் 10 ஆயிரம் புத்தகங்கள் வைத்திருந்தார்.
- ❖ இவர் அளவுக்கு இலக்கியத் தொடர் சொற்பொழிவுகள் நடத்திய தமிழறிஞர்கள் இருக்க மாட்டார்கள்.
- ❖ சிலம்பொலி
- ❖ இலக்கியச் சிந்தனைகள்
- ❖ பெருங்கதை ஆராய்ச்சி
- ❖ நெஞ்சை அள்ளும் சீறா
- ❖ பாவேந்தர் ஓர் உலகக் கவிஞர்
- ❖ காப்பியக் கம்பரும் புரட்சிக் கவிஞரும்
- ❖ வளரும் தமிழ்
- ❖ சங்க இலக்கியத் தேன்

ஆகியவை அவரது புகழ் பெற்ற நூல்கள்.

**சிலம்பொலியார் குடும்பத்தினருக்கு எனது நன்றிகள்!**

சிலம்பொலியாரிடம் அணிந்துரை வாங்குவது, தங்களது நூலுக்கு மகுடம் எனக் கருதி தமிழ் ஆராய்ச்சியாளர்கள் வாங்குவார்கள்.

தமிழ் இனிமையான மொழி என்பதை அவரது சொற்பொழிவுகளைக் கேட்கும் போது உணரலாம்.

புரட்சிக் கவிஞரின் கவிதைகளை அவர் சொல்லும் போது உணர்ச்சி கொப்பளிக்கும். இத்தகைய பெருமைக்குரிய தமிழ் அடையாளமாக விளங்கும் சிலம்பொலியார் அவர்களுக்குச் சிலை அமைப்பது மிக மிக மகிழ்ச்சிக்குரியது. அதனைத் திறந்து வைப்பதை என் வாழ்நாளில் கிடைத்தற்கரிய வாய்ப்பாகக் கருதுகிறேன்.

இந்த வாய்ப்பை வழங்கிய விழாக் குழுவினர்க்கும் - சிலம்பொலியார் குடும்பத்தினர்க்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். சிலம்பொலியார் புகழ் வாழ்க! நன்றி, வணக்கம்.

இவ்வாறு தமது உரையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.

> **பள்ளி ஆசிரியராக இருந்தாலும் - தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநராக இருந்தாலும் - தமிழ்நாட்டு மேடைகளில் சிலம்பொலிக்காமல் இருந்தது இல்லை செல்லப்பனார். பழங்காலப் புலவர்களைப் போலவே புலமைத் திறனும், சொல்லாட்சியும், அதேநேரத்தில் தமிழ் உரிமைக்காகப் போராடும் உணர்ச்சியும் ஒருங்கே பெற்றவர் நம்முடைய சிலம்பொலியார் அவர்கள்.**

---

### "நீட் தேர்வின் பலன் 'ஜீரோ' தான்!"

# ஜீரோ விதி அறிவிப்பால் ஒன்றிய அரசே அம்பலப்பட்டு நிற்கிறது!

## 'தினகரன்' தலையங்கத்தில் குற்றச்சாட்டு!

*சென்னை, செப். 24-*

'நீட்' தேர்வின் மதிப்பு அறிவிப்பில் ஜீரோ விதி என ஒன்றிய அரசு அறிவித்துவிட்டு தற்போது மக்களிடம் அம்பலப்பட்டு நிற்கிறது என 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் குற்றம் சாட்டியுள்ளது.



தினகரன்

செப்டம்பர் 23, 2023 சனிக்கிழமை

'ஜீரோ' விதி தேவையா?

முதுநிலை மருத்துவ படிப்புக்கான நீட் நுழைவு தேர்வு கட்ஆப் மதிப்பெண்ணை 'ஜீரோ' என்று ஒன்றிய அரசு அறிவித்துள்ளது. இந்த அறிவிப்புக்கு நாடு முழுவதும் பலத்த எதிர்ப்பு கிளம்பியுள்ளது. எம்பிபிஎஸ், பிடிஎஸ் படிப்பு முடித்துவிட்டு முதுநிலை மருத்துவ படிப்பில் சேருவதற்கும் நீட் தேர்வு நடத்தப்படுகிறது. நீட் தேர்வில் பெறும் கட்ஆப் மதிப்பெண்ணை

அது வருமாறு:-

முதுநிலை மருத்துவ படிப்புக்கான நீட் நுழைவு தேர்வு கட்ஆப் மதிப்பெண்ணை 'ஜீரோ' என்று ஒன்றிய அரசு அறிவித்துள்ளது. இந்த அறிவிப்புக்கு நாடு முழுவதும் பலத்த எதிர்ப்பு கிளம்பியுள்ளது. எம்.பி.பி.எஸ்., பி.டி.எஸ். படிப்பு முடித்துவிட்டு முதுநிலை மருத்துவ படிப்பில் சேருவதற்கும் நீட் தேர்வு நடத்தப்படுகிறது. நீட் தேர்வில் பெறும் கட்ஆப் மதிப்பெண்ணை கொண்டே முதுநிலை மருத்துவப்படிப்புக்கு இடம் கிடைக்கும். தற்போது இந்த கட்ஆப் மதிப்பெண்ணைத்தான் 'ஜீரோ'வாக இந்திய மருத்துவ கவுன்சில் அறிவித்துள்ளது.


நாட்டில் உள்ள தனியார் மருத்துவ கல்லூரிகளில் முதுநிலை பட்டப்படிப்புக்கான இடங்களில் மாணவ, மாணவிகள் இந்த ஆண்டு சேர விருப்பம் காட்டவில்லை. அதனால் நிறைய இடங்கள் காலியாக உள்ளன. கடந்த ஆண்டு இந்தியாவில் மருத்துவ மேற்படிப்புக்கான மொத்த இடங்கள் 64,059. இதில் 4,400 இடங்கள் காலியாகவே இருந்தன. 2021-22ம் ஆண்டு மருத்துவ மேற்படிப்புக்கான மொத்த இடங்கள் 60,202 ஆக இருந்தது. இதில், 3,744 இடங்கள் காலியாகவே இருந்தன. இதனால் தனியார் கல்லூரிகளுக்கு வருவாய் இல்லை. எனவே தனியார் கல்லூரிகளில் அனைத்து இடங்களையும் நிரப்பவே இந்த 'ஜீரோ' அறிவிப்பு என கூறப்படுகிறது.

இந்த அறிவிப்பு மாணவ, மாணவிகளுக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. ஒன்றிய அரசின் இந்த அறிவிப்புக்கு அரசியல் தலைவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர். தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது சமூக வலைதள பதிவில், "நீட் தேர்வின் பலன் 'ஜீரோ' தான் என்று ஒன்றிய அரசே ஒப்புக்கொண்டுவிட்டது. கோச்சிங் சென்டர்களில் சேருங்கள். நீட் தேர்வுக்கு பணம் கட்டுங்கள் போதும் என்றாகிவிட்டது. நீட்=0" என குறிப்பிட்டுள்ளார்.

அதாவது கடைசி மதிப்பெண் நெகட்டிவில் இருந்தாலும் அதுதான் 'ஜீரோ பெர்சண்டைல்'. எனவே, 'ஜீரோ' மதிப்பெண்ணுக்கும் கீழ் 'நெகட்டிவ்' மதிப்பெண் எடுத்தாலும் சீட் உறுதி. இது தேவையா?" என்று விமர்சிக்கிறார்கள் கல்வியாளர்கள். "நீட் தேர்வில் அனைத்து கேள்விகளையுமே தவறாக எழுதி, 100 மதிப்பெண் பெற்றிருந்தாலுமே அது ஜீரோவுக்கு சமம். ஆக தேர்வு எழுதினாலே சீட் உண்டு என்றால், எதற்கு நீட் தேர்வு"? என்றும் அவர்கள் கேள்வி எழுப்புகிறார்கள். "ஒரு காலத்தில் உண்மையான சேவை மனப்பான்மை கொண்ட அரசு மருத்துவருக்கு நல்ல போனஸ் மதிப்பெண் கிடைத்து மேற்படிப்புக்கான இடம் ஒதுக்கப்பட்டது.

குறைந்தபட்ச மதிப்பெண்கள் பெற்று நீட் தேர்வில் வெற்றி பெற்றவர்கள் காலியாக உள்ள இடங்களை பயன்படுத்திக்கொள்ளும் வகையில் இந்த நடைமுறையை ஒன்றிய அரசு கொண்டுவந்திருப்பதாக கூறப்பட்டாலும் அரசின் இந்த அறிவிப்பு பெரும் குழப்பம் மிகுந்ததாகவே உள்ளது. இந்த ஆண்டு ஒன்றிய அரசால் இந்த குழப்பம். அடுத்த ஆண்டு எம்.பி.பி.எஸ்., பி.டி.எஸ். படிப்புக்கான நீட் தேர்வில் என்ன குழப்பத்தை செய்யப்போகிறார்களோ என்று மாணவ, மாணவிகள் தவித்தபடி உள்ளனர்.

இவ்வாறு 'தினகரன்' தலையங்கத்தில் குற்றம் சாட்டியுள்ளது.




நாள் : 24.09.2023 ஞாயிற்றுக்கிழமை
இடம் : காங்கேயம் – படியூர் அருகில்
கலைஞர் 100 1924 - 2023
மேற்கு மண்டல (BLA-2)
வாக்குச் சாவடி பொறுப்பாளர்கள்
பயிற்சி பாசறைக் கூட்டத்திற்கு வருகை தரும்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
கழகத் தலைவர்
அவர்களை
வருக! வருக!! என வரவேற்கிறேன்...
க.செல்வராஜ் MLA
திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர்
திருப்பூர் வடக்கு மாவட்ட கழக செயலாளர்
திருப்பூர் வடக்கு மாவட்ட தி.மு.க.


கலைஞர்
100
1924 - 2023
நாள் : 24.09.2023 ஞாயிற்றுகிழமை
இடம் : திருப்பூர் மாவட்டம், காங்கேயம் வட்டம்
படியூர் – ஊத்துகுளி சாலை.
தி.மு.கழக மேற்கு மண்டல வாக்குச்சாவடி
பொறுப்பாளர்கள் பயிற்சி பாசறை கூட்டம்
பங்கேற்று சிறப்புரையாற்ற வருகை தரும்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
கழகத் தலைவர்
அவர்களை!
வருக!! வருக!!! என வரவேற்று மகிழும்
மு.பெ.சாமிநாதன்
தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர்,
தி.மு.கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர்
கயல்விழி செல்வராஜ்
தமிழக ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர்,
தி.மு.கழக மகளிர் அணி துணைச் செயலாளர்
இல.பத்மநாபன்
தலைவர்,4வது மண்டலம் – திருப்பூர் மாநகராட்சி,
திருப்பூர் தெற்கு மாவட்ட தி.மு.கழக செயலாளர்

## தி.மு.க. நெசவாளர் அணி

# மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

### (ஐந்தாவது பட்டியல்)

### தி.மு.க. நெசவாளர் அணித் தலைவர் நன்னியூர் இராஜேந்திரன் அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. நெசவாளர் அணி அணியின் மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**புதுச்சேரி- காரைக்கால் மாநிலம்**

தலைவர் - டி.சண்முகம் எண் 7/2, சேனியர் வீதி, கோட்டுச்சேரி, காரைக்கால்

துணைத் தலைவர் - ஜெ.சக்தி எண் 61, புதுத்தெரு, கோட்டுச்சேரி, காரைக்கால்.

அமைப்பாளர் - **டி.குபேந்திரன்,** எண் 3, பெரமசாமிபிள்ளை வீதி, காரைக்கால்.

துணை அமைப்பாளர்கள் - எஸ்.பரந்தாமன், எண் 9, எல்லையம்மன் கோவில் தெரு, திருப்பட்டினம், காரைக்கால்.

கே.துளசிராமன், எண் 13, பெரியகுளத்து மேட்டுத்தெரு, திருப்பட்டினம் காரைக்கால் கே.செந்தில்குமார், எண் 27, எல்லையம்மன் கோவில் தெரு, திருப்பட்டினம், காரைக்கால். ஆர். யுவராஜ், முக்குளத்து வீதி, கோட்டுச்சேரி, காரைக்கால். ஜி. கோபாலகிருஷ்ணன், எண் 36(6) தெய்தா வீதி காரைக்கால்

**தஞ்சை மாநகரம்**

தலைவர் - என்.தெய்வநாயகம், எண்.173-48, ரெட்டிபாளையம்ரோடு, சீனிவாசபுரம், தஞ்சாவூர்

துணைத் தலைவர் - கே.சுரேஷ்குமார், எண் 68 எ, செக்கடித்தெரு, சீனிவாசபுரம், தஞ்சாவூர்

அமைப்பாளர் - **டி.ஆர்.சுரேந்திரன்,** எண் 56/2210, சிவராய தோட்டம், மானம்புச்சாவடி, தஞ்சாவூர்

துணை அமைப்பாளர்கள் - எம்.ஜெ.ரவிச்சந்திரன், எண்.23, சிவராயர் தோட்டம், மானம்புச்சாவடி, தஞ்சாவூர் பி.டி.அசோகன், எண் 2136, வி.பி.கோயில் சன்னதி தெரு, மானம்புச்சாவடி, தஞ்சாவூர் கே.ஆர்.ராஜன், 19/28, தொல்காப்பியர் நகர், 4-ம் தெரு, தொம்பன் குடிசை, தஞ்சாவூர் எஸ்.ஆர்.லெட்சுமண ராமன், எண்.52/38, சிவராய தோட்டம், மானம்புச்சாவடி, தஞ்சாவூர் ஜெ.ஸ்டீபன் அருள்ராஜ், எண்.6, புதிய வீட்டு வசதிவாரியம், புதுக்கோட்டை ரோடு, தஞ்சாவூர்

**தாம்பரம் மாநகரம்**

தலைவர் - பி.சிவசங்கரய்யா, எண்.81, காமராசர் சாலை, அனகாபுத்தூர், சென்னை - 600070

துணைத் தலைவர் - வி.நடராஜன், எண் 15/7, கம்பர் தெரு, புதுபெருங்களத்தூர், சென்னை - 600063

அமைப்பாளர் - **எம்.டி.விஜயகுமார்,** எண் 9, ரங்கைய்யா செட்டி தெரு, அனகாபுத்தூர், சென்னை - 600070

துணை அமைப்பாளர்கள் - அ.கருணாகரன், எண்.15, பேட்டைத்தெரு, அனகாபுத்தூர், சென்னை - 600070 வி.ரவி, எண் 15/7ஏ, கம்பர் தெரு, புதுபெருங்களத்தூர், சென்னை - 600063 நவீன்குமார், எண் 12 டீ, ரூபி ஷோபா கேஸ்டல், குட்வில் நகர், பழைய பெருங்களத்தூர், சென்னை - 600063 ஏ சோமு எண்.18, பக்தவச்சலம் நகர், அனகாபுத்தூர், சென்னை - 600070 கே.எஸ். பாபு எண்.65, கன்னியம்மன் கோவில் தெரு, அனகாபுத்தூர், சென்னை - 600070

**கரூர் மாவட்டம்**

தலைவர் - பி.கே.எஸ்.(எ) கந்தசாமி எண் 28, காந்தி நகர் மெயின்ரோடு, சின்னாண்டான்கோவில் ரோடு, கரூர் அஞ்சல், கரூர் தாலுகா கரூர் மாவட்டம்-639001,

துணைத் தலைவர் - கே.வி.தங்கராஜ் எண் 2எ, நீலிமேட்டு சந்து, கரூர் அஞ்சல், கரூர் தாலுகா, கரூர் மாவட்டம் -639001,

அமைப்பாளர் - **கு.வடிவேல்,** எண் 108, திட்ட சாலை, வெங்கமேடு அஞ்சல், கரூர் தாலுகா, கரூர் மாவட்டம் -639006,

துணை அமைப்பாளர்கள் - எஸ்.பி.எம்.சசிகுமார், கழுகூர் உடையார்பட்டி, வைகைநல்லூர் வழி, கழுகூர் அஞ்சல், குளித்தலை தாலுகா, கரூர் மாவட்டம் -639120, ஆர்.ரவி, எண் 18, பழனியப்பா தெரு, வெங்கமேடு அஞ்சல், கரூர் தாலுகா, கரூர் மாவட்டம் -639006, எஸ்.இளங்கோவன், எண் 16 எ, கே.பி,எஸ்.தெரு, இனாம் கரூர், வெங்கமேடு அஞ்சல், கரூர் தாலுகா, கரூர் மாவட்டம் -639006, பி.குணசேகரன், எண் 40, வளையபாளையம், பாண்டிலிங்கபுரம் அஞ்சல், புகளூர் தாலுகா, கரூர் மாவட்டம் -639151, ஆர்.ராஜகோபால், எண் 2/08, கே.ஆலமரத்துப்பட்டி, கே.பிச்சம்பட்டி அஞ்சல், கரூர் தாலுகா, கரூர் மாவட்டம் -639118.

**திருப்பூர் தெற்கு மாநகரம்**

தி.மு.க. நெசவாளர் அணியின் திருப்பூர் தெற்கு மாநகர அமைப்பாளராக ஏற்கனவே நியமிக்கப்பட்ட மு.சலீம் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக **ஆ.செந்தில்குமார்,** (வலையங்காடு 1-வது வீதி, காந்திநகர் அஞ்சல், திருப்பூர்- 641603,) அவர்கள், திருப்பூர் தெற்கு மாநகர நெசவாளர் அணியின் அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார். ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாநகர நெசவாளர் அணி நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றிட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்

**புதுச்சேரி மாநிலம்**

தலைவர் - மா.மதி (எ) சுப்புராயன் எண் 10, பெருமாள் கோயில் தெரு, பண்டசோழநல்லூர், நெட்டபாக்கம், புதுச்சேரி மாநிலம்-605106,

துணைத் தலைவர் - கி.கதிரவன் எண் 31, பள்ளிக்கூட வீதி, கோவிந்த சாலை, விஆர்எம் தோட்டம், புதுச்சேரி -11,

அமைப்பாளர் - **ந.செந்தில்முருகன்,** எண் 26, சாலைத் தெரு, முத்தையால்பேட்டை, புதுச்சேரி -605003,

துணை அமைப்பாளர் - த.செல்வராசு, எண் 65, விநாயகர் கோயில் தெரு, சாந்தி நகர், லாஸ்பேட்டை, புதுச்சேரி -605008, வி.வேலாயுதம், எண் 35, ரெட்டியார் தெரு, மடுகரை, புதுச்சேரி -605105. இரா.சேகர், எண் 2, திருநாவுக்கரசர் வீதி, விஸ்வநாதன் நகர், முத்தையால்பேட்டை, புதுச்சேரி -605003, கி. சுப்பிரமணியன், எண் 26, ஜவகர் நகர், 5வது குறுக்குத்தெரு, ரெட்டியார்பாளையம், புதுச்சேரி -605010, தி.சிவகுமார், எண் 2, தயானந்தர் வீதி, இந்திராநகர், முதலியார் பேட்டை, புதுச்சேரி -4, து.அன்பு, எண் 36, விநாயகர் கோவில் தெரு, சண்முகாபுரம், புதுச்சேரி -605009, க.வேல்முருகன், எண் 5, லோக முத்து மாரியம்மன் கோவில் தெரு, முத்தையால்பேட்டை, புதுச்சேரி -33,

**திருப்பூர் தெற்கு மாவட்டம்**

தி.மு.க. நெசவாளர் அணியின் திருப்பூர் தெற்கு மாவட்டத் துணைத் தலைவராக ஏற்கனவே நியமிக்கப்பட்ட பி.சி.புஷ்பராஜ் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக **தி.தர்மலிங்கம்,** (1/169டி, தெற்கு வீதி, பூளவாடி, உடுமலைப்பேட்டை-642206), அவர்கள் திருப்பூர் தெற்கு மாவட்ட நெசவாளர் அணியின் துணைத் தலைவராக நியமிக்கப்படுகிறார். ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட நெசவாளர் அணி நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றிட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்

**ஆந்திர மாநிலம்**

தலைவர் - வி.ஜி.இளங்கோவன் எண் 6-110, புதுத் தெரு, புதுப்பேட்டை, நகரி-517590, சித்தூர் மாவட்டம், ஆந்திர மாநிலம்,

துணைத் தலைவர் - பி.பி.மெய்யப்பன், கதவு எண்,7-21 ஏ, கே.வி.பி.ஆர்,பேட்டை, நகரி-517592, சித்தூர் மாவட்டம், ஆந்திர மாநிலம்,

அமைப்பாளர் - **பி.கே.சொக்கலிங்கம்** எண் 1-83, கம்சலா தெரு, சத்ரவாடா, நகரி மண்டலம், சித்தூர் மாவட்டம், ஆந்திர மாநிலம்,

துணை அமைப்பாளர்கள் - கே.இ.பழனி எண் 1-126, பி.டி.எம். தெரு, புதுப்பேட்டை, நகரி-517590, சித்தூர் மாவட்டம், ஆந்திர மாநிலம், கே.ஜி.கிரி, எண்,5-6/44 , மாணிக்கவாசகர் தெரு, ஏகாம்பரகுப்பம், நகரி-517592, சித்தூர் மாவட்டம், ஆந்திர மாநிலம், சி.எம்.சதாசிவம் எண் 5-116, நடுத் தெரு, புதுப்பேட்டை, நகரி-517590, சித்தூர் மாவட்டம், ஆந்திர மாநிலம், பி.எஸ்.சீனிவாசன் நடுத் தெரு, சத்ரவாடா, நகரி, சித்தூர் மாவட்டம், ஆந்திர மாநிலம், எம்.எஸ்.கோதண்டன், எண்,6/87, கே.வி.பி.ஆர்,பேட்டை, நகரி-517592, சித்தூர் மாவட்டம், ஆந்திர மாநிலம்.

**திருநெல்வேலி மத்திய மாவட்டம்**

துணை அமைப்பாளர்கள் - வி.எஸ்.டி. சாகுல்ஹமீது, 3/83, ஹாமீம்புரம் வடக்கு தெரு, மேலப்பாளையம், திருநெல்வேலி - 627 005. எஸ்.சங்கரலிங்கம், எம்-89, த.நா.வீ.வசதி வாரியம், அன்பு நகர், பெருமாள்புரம், திருநெல்வேலி. எஸ்.அங்கப்பன், 33ஏ, காந்தி நகர் மெயின் ரோடு, திருநெல்வேலி - 627008.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை- 18.
நாள்: 22-09-2023

**நன்னியூர் இராஜேந்திரன்**
தலைவர்,
தி.மு.க. நெசவாளர் அணி

## தி.மு.க. பொறியாளர் அணி

# மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

### (நான்காவது பட்டியல்)

### பொறியாளர் அணிச் செயலாளர் கு.கருணாநிதி அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. பொறியாளர் அணியின் மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**புதுச்சேரி - காரைக்கால் மாநிலம்**

தலைவர் - ஜி.யூ.நீலமேகம் டி.சி.இ எண்4, சிவன்கோவில் தெரு, செருமாவிலங்கை, நெடுங்காடு அஞ்சல், காரைக்கால்

துணை தலைவர் - பி.சரவணகுமார் டி.இ.சி.இ எண் 127, இராஜாத்தி நகர், காரைக்கால்

அமைப்பாளர் - **ஜெ.ஜெய்பாபு பி.டெக்** 270/1 மெயின்ரோடு, தக்களூர், காரைக்கால்

துணை அமைப்பாளர்கள் - எஸ்.எடிசன் ரொனால்ட் ஜவகர் டி.சி.இ எண் 35, ஜீவானந்தம் வீதி, காரைக்கால் ஹெச். முஹமது அபுதல்ஹா டி.சி.இ 11-வி.எஸ் நகர் புதுத்துறைரோடு, காரைக்கால் கே.பாலசந்திரன் டி.இ.இ.இ 10.செபஸ்தியார்கோவில் தெரு காரைக்கால் பி.கார்த்திக் பி.டெக் 42 வயல்கரை வீதி, காரைக்கால் டி.ஹரிபிரசாத் ஐடி 85 காமராஜர்சாலை, காரைக்கால்

**புதுச்சேரி மாநிலம்**

தலைவர் - எஸ்.பி.பூபாலன் 47,48, 12வது குறுக்குத் தெரு, கிருஷ்ணா நகர், புதுச்சேரி 09

துணை தலைவர் - ரா.மணிகண்டன் 20 முதல் தெரு, பெரியார் நகர், மணவெளி, அரியாங்குப்பம் புதுச்சேரி 605007

அமைப்பாளர் - **ஆ.அருண்குமார்** 38 பஜனை மடத்து வீதி, தேங்காய்திட்டு, புதுச்சேரி 4

துணை அமைப்பாளர்கள் - ஆ.பிரபாகரன் 30 மெயின் ரோடு, சுள்ளியான்குப்பம், மனப்பட்டு அஞ்சல், புதுச்சேரி 02 ஏ. வீரமணிகண்டன் 15, பெரியபேட், கரையாம்புத்தூர், புதுச்சேரி 06 கு.சுவாதி ஜி27,தியாகு முதலியார் நகர், முதலியார்பேட்டை, புதுச்சேரி 04 க. உமாபதி 13, ஒத்தவாதை வீதி, கோவிந்த சாலை, பாரதிபுரம், புதுச்சேரி 11 ஏ.எழிலரசன் 51 சரோஜினி வீதி, ரோஜா நகர், அரும்பார்த்தபுரம், ரெட்டியார்பாளையம், புதுச்சேரி 10 சு.முகுந்தன் 17, பிள்ளையார் கோவில் வீதி தேங்காய் திட்டு, புதுச்சேரி 4 இரா. பிரகாஷ் 24, மாரியம்மன் கோவில் வீதி குண்டுப்பாளையம், தட்டாஞ்சாவடி புதுச்சேரி 09 வி.ரமேஷ் 7 இந்திரா காந்தி வீதி, ராம் நகர், சண்முகாபுரம், புதுச்சேரி 9 சே,சுவர்ணராஜ் எப்.2 - சத்தியம் அப்பார்ட்மெண்ட் முதல் குறுக்குத் தெரு, எம்.ஜி.ஆர் நகர், மேரி உழவர்கரை, புதுச்சேரி ம.அர்ஜுன் (எ) ரங்கராஜு 137, சின்ன சுப்புராயப்பிள்ளை விதி, உருளையன்பேட்டை, புதுச்சேரி -1

**திருச்சி வடக்கு மாவட்டம்**

துணை அமைப்பாளர்கள் - ஜி.கலைச்செல்வன் கண்ணனூர் பாளையம், துறையூர் வட்டம், திருச்சி ஆர்.ரமேஷ் 4/148 டி. ரெங்கநாதபுரம் (அ) துறையூர் வட்டம், திருச்சி

**கரூர் மாவட்டம்**

தலைவர் - எஸ்.மகேஸ்வரன் ஏ.கே.பாரதி நகர், அப்பிபாளையம் (அ) மண்மங்கலம், கரூர்-03

துணை தலைவர் - ஆர்.தினகரன் 24டி, வள்ளுவர் தெரு, பசுபதிபாளையம் (அ) கரூர் தாலுகா, கரூர் 04

அமைப்பாளர் - **வி.அருண்** 79சி-21 அருகம்பாளையம் தாந்தோனிமலை (அ), கரூர் தாலுகா கரூர் -05

துணை அமைப்பாளர்கள் - தாண்டவபிரசாத் 13/4ஏ, கே. துறையூர், தோகைமலை(அ) குளித்தலை தாலுகா, கரூர் பி. இளங்கோவன் 1/1 சத்திய மூர்த்தி நகர், 6 வது தெரு, தாந்தோனிமலை (அ) கரூர் தாலுகா, கரூர் வி.இளங்கவி 3/5 ஆண்டாங்கோவில் புதூர், ஆண்டாங்கோவில் கிழக்கு (அ) மண்மங்கலம் தாலுகா, கரூர் எம்.செல்வகுமார் 257 கட்டளை அக்ரஹாரம், ரெங்கநாதபுரம் வடக்கு, கட்டளை அஞ்சல், கரூர் ஜி.சிலம்பரசன் 7/152 மாரியம்மன் கோவில் தெரு, நெரூர் வடபாகம், பழையூர் (அ) மண்மங்கலம் தாலுகா, கரூர்

**கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம்**

தலைவர் - ராஜேஸ் ரெத்தினமணி 20/112 கன்னக்குறிச்சி நடுவூர், கணபதிபுரம் அஞ்சல் கன்னியாகுமரி (மா)

துணை தலைவர் - மு.பழனி 19 அம்மன் கோவில் தெரு, வீரநாரயணமங்கலம், தாழக்குடி, கன்னியாகுமரி (மா)

**திருநெல்வேலி கிழக்கு மாவட்டம்**

தலைவர் - க.ஆனந்த் 10/28 சிங்காரதோப்பு தெரு, கூடன்குளம் 06

துணை தலைவர் - பி.தினகர பாண்டியதுரை, 3ஏ, கம்மாளர் மேல தெரு, அம்பாசமுத்திரம்

**தூத்துக்குடி வடக்கு மாவட்டம்**

துணை அமைப்பாளர்கள் - ஜாண்சன் டேவிட் க.எண் 26 சுந்தரவேல்புரம் முதல் தெரு, தூத்துக்குடி க.சின்னத்துரை கேம்ப்1, தெர்மல் நகர், தூத்துக்குடி -5

**திருவாரூர் மாவட்டம்**

திருவாரூர் மாவட்ட பொறியாளர் அணி மாவட்ட துணை அமைப்பாளராக ஏற்கனவே நியமிக்கப்பட்ட **சா.பகலவன்** அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து அவருக்கு பதிலாக **இரா.கி.பிரபாகரன்** (6/243 புற்றிடண்கொண்டாஞ்சேரி, திருக்கருக்காவூர் அஞ்சல், வலங்கைமான் வட்டம், திருவாரூர்) அவர்கள் திருவாரூர் மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார். ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட அணி நிர்வாகிகள் இவர்களுடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**மதுரை வடக்கு மாவட்டம்**

துணை அமைப்பாளர்கள் - பி.எம். தங்கத்துரை பாண்டியன், பெருமாள்பட்டி, வண்டியூர், மதுரை 20 ஜெ.சுஜின் ஜான் 140, டி.என். ஹெச்.பி காலணி, தமிழ்நகர், ஆனையூர், மதுரை எம். மணிகண்டன் 5-909 காயாம்பட்டி, கொங்கம்பட்டி, மேலூர், மதுரை

**இராமநாதபுரம் மாவட்டம்**

துணை அமைப்பாளர்கள் - கா.மருதுபாண்டி, 2/ஏ இளங்கோவடிகள் தெரு, இராமநாதபுரம், வி.முகனேஸ்வரன், நெ 3.2960, ஆத்மநாதசாமி நகர், பட்டிணம்காத்தான், இராமநாதபுரம் த. சபிக்குர் ரஹ்மான் 3213, வெற்றில்லைக்கார தெரு, இராமநாதபுரம்,

**கோவை தெற்கு மாவட்டம்**

துணை அமைப்பாளர் - கே.பி.எஸ். சத்தியமூர்த்தி 8/282 சாய்குடில், துளசிங்கநகர் வால்பாறை, 642127

**தஞ்சை மத்திய மாவட்டம்**

துணை அமைப்பாளர் - கே.ஆர்.பி.சீனிவாசன், எம்.டெக்., எம். எஸ்.டபிள்யூ., 53,நடுத்தெரு, கடம்பன்குடி, அம்பதுமேல்நகரம் அஞ்சல், திருவையாறு தாலுக்கா, தஞ்சாவூர் மாவட்டம்

**நாகப்பட்டினம் மாவட்டம்**

தலைவர் - பிரசாத் (எ) ராஜேந்திரபிரசாத் 61/எப்8 நீலா வடக்கு வீதி, நாகப்பட்டினம்

துணை தலைவர் - ச.சண்முகராஜேஸ்வரன் 3/284 காளியம்மன் கோவில் தெரு, மேலவாழக்கரை & அஞ்சல் திருக்குவளை வட்டம், நாகப்பட்டினம்

**தஞ்சை மாநகரம்**

அமைப்பாளர் - **சி.எம். வினோத்** 25- 3217 திரௌபதியம்மன் கோவில் தெரு, தஞ்சாவூர்

துணை அமைப்பாளர்கள் - எ.நிமல்பிரசாத், 9-4 சுப்ரமணியபுரம், 2வது தெரு, எம்.சி ரோடு, தஞ்சாவூர் என். துரைராஜன் 186, 4வது தெரு நட்சத்திரநகர் தஞ்சாவூர் எஸ்.ராகுல் 28எ, அலிகுப்தா தைக்கால், வ.உ.சி நகர் அருகில், தஞ்சாவூர் நீ. மணிகண்டன் 515 கீழராஜவீதி, தஞ்வாவூர் பி.பார்த்திபன் எம்.ஐ.ஜி முல்லைதெரு, புதியவீட்டுவசதி வாரியம், தஞ்சாவூர்

**நீலகிரி மாவட்டம்**

தலைவர் - போ.தேவராஜ் பிக்கைகண்டி, சோலூர், உதகை, நீலகிரி

துணை தலைவர் - ஜே.பிரதீஷ் ஜோபின் 4/73ஜி ஓ.வி.எச். சாலை, கூடலூர்

அமைப்பாளர் - **ஆர்.செந்தில்நாதன்** கொட்டநள்ளி, நெடுகுளா, நீலகிரி

துணை அமைப்பாளர்கள் - வி.தமிழ்செல்வன் ஆனந்தகிரி, கோத்தகிரி நீலகிரி ீரராம் நெல்லியாளம், பந்தலூர், நீலகிரி டி. ஜீவகுமார் 151/சி முள்ளிக்கொரை, நீலகிரி ஜி.சந்தீப்குமார், 31/55 குமரன் நகர் குன்னூர், நீலகீர் தங்கேஷ் 6/423 கேர்பெட்டா, கோத்தகிரி நீலகிரி சி.எ.முஜிப்பூர்ரகுமான் 77 பாம்பேகேசில், உதகை ஆ.தினேஷ் பேக்டரிமட்டம், கெளப்பள்ளி, நீலகிரி கா. விஜயன் 19/52பி ஏலமன்னா, நெல்லியாளம், நீலகிரி

**விழுப்புரம் வடக்கு மாவட்டம்**

துணை அமைப்பாளர் - பா.சரவணன் 3/381 பாளையம் வீதி, மயிலம், , திண்டிவனம் தாலுக்கா

**புதுக்கோட்டை வடக்கு மாவட்டம்**

துணை அமைப்பாளர்கள் - வி.என்.எம்.குமரேசன், மாப்பிள்ளையார்குளம், புதுக்கோட்டை. தி.சதீஸ்குமார், 28, நம்புரான்பட்டி, மோகனூர் அஞ்சல், புதுககோட்டை மாவட்டம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை- 18.
நாள்: 22-09-2023

**கு. கருணாநிதி**
செயலாளர்,
தி.மு.க. பொறியாளர் அணி

### கலைஞர் நூற்றாண்டு விழா! தெற்கு மாவட்டக் கழகம் - விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில்

# புதுக்கோட்டையில் இன்று மாபெரும் கிரிக்கெட் போட்டி!

### அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமை! அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் - டாக்டர் எஸ்.அண்ணாமலை முன்னிலை! தயாநிதி மாறன் எம்.பி. துவக்கி வைக்கிறார்!

*புதுக்கோட்டை, செப். 24-* புதுக்கோட்டை தெற்கு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகம் விளையாட்டு மேம்பாட்டு அணி இணைந்து நடத்தும் மற்றும் கலைஞர் நூற்றாண்டு விழா மாபெரும் கிரிக்கெட் போட்டி இன்று (24.9.2023-ஞாயிற்றுக்கிழமை) 1.00 மணி அளவில் நடைபெறுகிறது.

மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கோ.சக்திவேல் வரவேற்றுப் பேசுகிறார்.

மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமை வகிக்கிறார்.

அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், டாக்டர் எஸ். அண்ணாமலை ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இப்போட்டியை - கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர் தயாநிதிமாறன் எம்.பி. துவக்கி வைத்து பரிசுகள் வழங்குகிறார்.

உதயம் எஸ்.சண்முகம், பொன்துரை, ஆர்.ஆர். கே.கலைமணி, இ.ஏ. கார்த்திகேயன், மகேஸ்வரி சண்முகநாதன், பொன்.கணேசன், க.இராஜேந்திரன், இரா.ஆனந்த், பா.வெங்கடேசன், டி.முத்து, எஸ். எம்.சீனியார், சக்தி இராமசாமி, அடைக்கலம், தாஹீர், பி.மாரியப்பன், கார்த்திகேயன், மணிராஜன், பாத்திமாபீவி, என். கே.எஸ்.சாகுல் ஹமீது, பழனி தேவா, விமல், இ.ஏ. பெரியகருப்பன், சோம. ஆறுமுகம், சி.காசிநாதன், மைவயல் கணபதி, ஜி.துளசிராமன், சுமங்கலி ஷாஜகான், கலாநேசன், அஜ்மீர், சேக் இஸ்மாயில், நசுருதீன், வீரையா, என்.முருகன், கணேசன், என்.கே. எஸ்.சின்னராஜா, கைக்குறிச்சி செல்வம், செல்லத்துரை, காந்திநாதன், கைராசி, புருஷோத்தமன், வி.சி.செல்வம், யோகராஜ், பழனிச்சாமி, கே.வி.இராமசாமி, அனந்தராமன், ராவுத்தர்கனி, கே.ஏ.கார்த்திகேயன், தமிழ்நாடு பிச்சை அன்பழகன், ஜி.எம்.ஆர்.காமராஜ், தமிழ்மறை செல்வன், பி. கருணாகரன், முருக நாராயணன், ரமேஷ், எம். விவேக், பாஸ்கர், கல்யாணம், விஜி, செந்தில், வடிவேல், ஐயப்பன், செந்தில், அப்பு, ஒத்தக்கடை சேகர், மணி, அண்ணாத்துரை, ப.கர்ணா, பட்டா பாலு, காசி, மதி, கார்த்தி, கிரி, குமார், கருப்பையா, மீன் முருகேஷ், அருளானந்து, சேக், சுபாஷ், பிரபு, பிரிட்டோ, பழனிக்குமார், சாகுல், சரவணன், மீன் ரவி, சேசு உள்பட பலரும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்கின்றனர்.

வி.ரமேஷ் நன்றி கூறுகிறார்.



திருப்பூர் படியூரில் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (ஞாயிற்றுக்கிழமை) கலந்து கொள்ளும் BLA 2 முகவர்கள் கூட்டம் நடைபெறும் பந்தலை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன், செய்தித்துறை அமைச்சர் எம்.பி.சாமிநாதன் மற்றும் திருப்பூர் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் பத்மநாபன் ஆகியோர் சென்று பார்வையிட்டனர். உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் கே.எம்.ராஜ், செந்தில் (எ) ரங்கராஜ் தலைமை பொதுக்குழு உறுப்பினர் பி.வீரபத்திரன் மற்றும் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

### உறக்க நிலையில்

# சந்திரயான்-3 லேண்டர், ரோவர்!

*பெங்களூரு,செப். 24 -* திட்டமிட்டபடி நிலவின் தென்துருவத்தில் சந்திரயான் 3 விண்கலத்தை இஸ்ரோ வெற்றிகரமாக தரையிறக்கியது. இதன் மூலம் நிலவின் தென்துருவத்தில் தரையிறக்கிய முதல் நாடு என்ற பெருமையை இந்தியா பெற்றது.

தென் துருவப் பகுதியில் இரவு சூழல் வந்துவிட்டதால் விக்ரம் லேண்டர் மற்றும் பிரக்யான் ரோவர் உறக்க நிலையில் வைக்கப் பட்டது.

தற்போது நிலவில் சூரிய ஒளி மீண்டும் வருவதால் லேண்டர், ரோவர் கலன்களை செயல்பாட்டுக்கு கொண்டு வருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று இஸ்ரோ அறிவித்திருந்தது.

நிலவில் வெப்பநிலை மைனஸ் 120200 டிகிரி செல்சியஸ் வரை செல்லும் என்பதால் லேண்டர் மற்றும் ரோவரை ஸ்லீப் மோடில் வைத்துள்ளோம். செப்டம்பர் 20 முதல், நிலவில் சூரிய உதயம் நடைபெறும் என்பதால் சோலார் பேனல் மூலம் முழுமையாக சார்ஜ் செய்யப்படும் என்று நாங்கள் நம்புகிறோம்.

எனவே லேண்டர் மற்றும் ரோவர் இரண்டையும் மீண்டும் தொடர்பு கொள்ள முயற்சிப்போம் என்று இஸ்ரோவின் விண்வெளி பயன்பாட்டு மைய இயக்குனர் நிலேஷ் தேசாய் பிடிஐயிடம் தெரிவித்தார்.

அதன்படி, ரோவர் பிரக்யான் மற்றும் லேண்டர் விக்ரம் ஆகியவற்றுடன் தொடர்பை மீண்டும் ஏற்படுத்த இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனமான இஸ்ரோ முயற்சிகளை மேற்கொண்டதில், இது வரை எந்த சிக்னலும் கிடைக்கப் பெறவில்லை என்றும், அதனை தொடர்பு கொள்வதற்கான முயற்சிகள் தொடர்ந்து நடைபெறும் என்றும் இஸ்ரோ தெரிவித்தது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### டி.கே. பழனிச்சாமி
### செப்டம்பர் 24 (2000)



திருவொற்றியூர் நகரக் கழகச் செயலாளராகவும், நகராட்சி மன்றத் தலைவராகவும், சட்டமன்ற உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அறப்போராட்டங்கள் அனைத்திலும் பங்கேற்றவர்.

'கழகத்தை உயிர்மூச்சாகக் கொண்டு ஓடியாடி உழைத்த உடன்பிறப்பு' என தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை கூறுவது, ஜமுக்காளத்தில் வடிகட்டிய பொய்!

# 40 அணைகளுக்கு மேல் கட்டி புகழ் பெற்றவர், தலைவர் கலைஞர்!

## கழகப் பொதுச் செயலாளர் - நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் விளக்கம்!

**சென்னை, செப். 24 -**

**தமிழ்நாட்டில் அணைகள் கட்டப்பட்டது குறித்து, பா.ஜ.க. மாநிலத் தலைவர் அண்ணாமலை வெளியிட்ட உண்மைக்கு மாறான கூற்றை மறுத்தும், உண்மையை விளக்கியும் கழகப் பொதுச் செயலாளரும் - நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன் அவர்கள் விடுத்த அறிக்கையில், "அண்ணாமலை கூறுவது அனைத்தும், ஜமுக்காளத்தில் வடிகட்டிய பொய்களாகும். தலைவர் கலைஞர் அவர்கள், தமது ஆட்சிக் காலங்களில் தமிழ்நாட்டில் 40க்கும் மேற்பட்ட அணைகள் கட்டி புகழ்பெற்றவர்!" என்று குறிப்பிட்டுள்ளார்.**



கழகப் பொதுச் செயலாளர் - நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள், இது தொடர்பாக விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு பாரதிய ஜனதா கட்சியின் மாநிலத் தலைவர் அண்ணாமலை, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் மீது ஒரு குற்றச்சாட்டு வைத்திருப்பதை இன்று (23.9.2023) வெளிவந்த "இந்து தமிழ் திசை" நாளிதழ் ஒரு செய்தியாக வெளியிட்டிருக்கிறது.

"தமிழகத்தை 9 ஆண்டுகள் ஆட்சி செய்த காமராஜர் விவசாயத்தைப் பாதுகாக்க 12 அணைகளைக் கட்டினார். ஆனால், ஆறாவது முறையாக ஆட்சி செய்யும் திராவிட முன்னேற் றக் கழகம், 5 அணைகளை மட்டுமே கட்டியுள்ளது" என்று ஒரு தவறான குற்றச்சாட்டை அண்ணாமலை அவர்கள் தி.மு.க. மீது சுமத்தி இருக்கிறார்.

நித்தம் நித்தம் இப்படிப்பட்ட உண்மைக்கு மாறான செய்திகளைப் பேசி வம்பில் மாட்டிக் கொள்வதை நண்பர் அண்ணாமலை வழக்கமாக்கிக் கொண்டிருக்கிறார். அதில் ஒன்றுதான், இந்தத் தவறான குற்றச்சாட்டு.

பெருந்தலைவர் காமராஜர் - கிருஷ்ணகிரி அணை, சாத்தனூர் அணை, வைகை அணை, மணிமுத்தாறு அணை போன்ற அணைகளைக் கட்டினார் என்பதில் மாறுபட்ட கருத்தில்லை.

ஆனால், கழக ஆட்சியில் 5 அணைகளை மட்டுமே கட்டினார்கள் என்று அண்ணாமலை அவர்கள் சொல்வது, ஜமுக்காளத்தில் வடிகட்டிய பொய் ஆகும்!

நம்பியாறு அணை,
பொய்கையாறு அணை,
கொடு முடியாறு அணை,
கடானா அணை,
இராமநதி அணை, -
பாலாறு - பொருந்தலாறு அணை,
மருதாநதி அணை,
பரப்பலாறு அணை,
வடக்கு பச்சையாறு அணை,
பிளவுக்கல் அணை,
மோர்தானா அணை,
அடவி நயினார் அணை,
ராஜாதோப்பு அணை,
ஆண்டியப்பனூர் ஓடை அணை,
சாஸ்தாகோயில் அணை,
குப்பநத்தம் அணை,
இருக்கன்குடி அணை,
செண்பகத்தோப்பு அணை,
நங்காஞ்சியார் அணை,
நல்லதங்காள் ஓடை அணை,
மிருகண்டாநதி அணை,
வரதாமநதி அணை,
வரட்டாறு வள்ளி மதுரை அணை, -

இப்படி 40 க்கும் மேற்பட்ட அணைகளைக் கட்டியது, கலைஞர் அவர்கள் தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி.

எனது நீண்ட அனுபவத்தில்
நான் கூறும் அறிவுரை!

ஆளுங்கட்சியின் மீது எதிர்க்கட்சி குற்றம் குறைகளைச் சொல்வது தவறில்லை. ஆனால், அவ்வாறு சொல்வதற்கு முன், சொல்கிற குற்றச்சாட்டு உண்மையா என்பதை ஒருமுறை பரிசீலனை செய்து பார்த்துக் கொள்ள வேண்டும். இது, என்னுடைய நீண்டகால அனுபவத்தில் நண்பர் அண்ணாமலைக்கு நான் சொல்கிற ஒரு யோசனையாகும். இல்லாவிட்டால், அவர் கூறும் குற்றச்சாட்டுகள் யாவும் புஸ்வாணமாகிவிடும்.

இவ்வாறு - அவ்வறிக்கையில் அமைச்சர் துரைமுருகன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

சிவகங்கையில் ஒன்றிய பா.ஜ.க. அரசின்

# ரயில்வே நிர்வாகத்தைக் கண்டித்து முழு கடையடைப்பு!

## அனைத்துக் கட்சிகள் - சமூக அமைப்புகளின் நிர்வாகிகள் 1000க்கும் மேற்பட்டோர் மறியல்: கைது!

*சிவகங்கை. செப்டம்பர் 24.*

மாவட்ட தலைநகராக சிவகங்கை உள்ளது. சிவகங்கையை சுற்றி100க்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளது. திருச்சி காரைக்குடி வழியாக செல்லும் சிறப்பு மற்றும் வாராந்திர ரயில்கள் 11க்கும் மேற்பட்ட ரயில்கள் தலைநகர் சிவகங்கையில் நிற்காமல் செல்கிறது.

இதில் இம்மாதம் 18ஆம் தேதி முதல் மானாமதுரை திருச்சி பகல் நேர ரயில் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்பட்டுள்ளது. மேலும் காரைக்குடி செல்லும் பல்லவன் விரைவு ரயிலை மானாமதுரை ஜங்சனிலிருந்து இயக்குமாறு பல ஆண்டுகளாக கோரிக்கை விடுத்தார்கள். ரயில்வே நிலையத்தில் கழிப்பறை வசதி எல்.இ.டி வசதிகள் போன்ற பல்வேறு வசதிகள் நிறைவேற்ற கோரி பலமுறை ரயில்வே நிர்வாகத்திற்கு மனு கொடுத்தும் கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை.

எனவே ஒன்றிய ரயில்வே துறையை கண்டித்தும் கோரிக்கைகள் நிறைவேற்ற வலியுறுத்தி நேற்று 23ம்தேதி முழுகடைஅடைப்பு மற்றும் ரயில் மறியல் போராட்டம் நடத்தப்படும் என்று சிவகங்கை சட்டமன்ற தொகுதி அனைத்து கட்சிகள் பல்வேறு சமூக அமைப்புகள் வர்த்தகசங்கம் சார்பில் போராட்டம் அறிவிக்கப்பட்டது..

அதன் தொடர்பாக நேற்று 23ஆம் தேதி சிவகங்கை நகர் அனைத்துக் கட்சிகள் வர்த்தக சங்கம் ஜமாத் மற்றும் சமூக அமைப்புகளின் சார்பில் முழு கடையடைப்பு மற்றும் ரயில் மறியல் போராட்டம் நடைபெற்றது. இதனை ஒட்டி சிவகங்கை நகர் மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் டீக் கடைகள், ஹோட்டல்கள், வணிக நிறுவனங்கள், ஸ்டேஷனரி கடைகள் மற்றும் குளிர் பான கடைகள் பெட்டிக் கடை கள் கடைகள் உட்பட அனைத்தும் முழுமையாக அடைக்கப்பட்டு இருந்தது.

ரயில்வே நிலையத்தில் காலை9=15 மணிக்கு திருச்சியில் இருந்து ராமேஸ்வரம் செல்லும் விரைவு ரயில் முன்பாக மறியல் போராட்டம் நடத்தப்பட்டது. நகர் கழக செயலாளரும் நகர் மன்ற தலைவருமான சி. எம்.துரைஆனந்த் தலைமையில் நடைபெற்ற மறியல் போராட்டத்தில் 500க்கும் மேற்பட்டோர் கைதுசெய்யப்பட்டார்கள்.

தி.மு.க. சார்பில் சிவகங்கை தெற்கு ஒன்றிய செயலாளர்எம்.ஜெயராமன் மாவட்டம் மாணவரணி துணை அமைப்பாளர்கள் கார்த்தி எஸ்.எம். மதி வாணன், நகரமன்ற துணைத் தலைவர் எம்.கார்கண்ணன் இளைஞர் அணி ,அயூப்கான்,நகர்மன்ற உறுப்பினர்கள் ஜெயகாந்தன் சரவணன் ,மதியழகன், விஜயகுமார் மாவட்ட மகளிர் தொண்டரணி துணை அமைப்பாளர் திலகவதி கண்ணன் சிவகங்கை ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி மஞ்சுளா பாலசந்தர் ,தொ.மு.ச. முருகேசன் காட்டுராசா க.பொன்னு ச்சாமி, அலாவுதீன்,முரசொலி மதி சூரி செல்வம் வழக்கறிஞர் பாஸ்கரன் மற்றும் நகர் கழக நிர்வாகிகள்அனைத்து நகர்மன்ற உறுப்பினர்கள் காங்கிரஸ் சார்பில்பொதுக்குழுஉறுப்பினர் வழக்கறிஞர் ஜெயசிம்மன் முன்னாள் மாவட்ட தலை வர்கள் சத்தியமூர்த்தி, எம். ராஜரத்தினம் பொதுக்குழு சண்முகராஜன் கணேசன் மகளிர் அணி துணைத் தலைவர் வித்யா கணபதி ரயில்வே ஆலோசனைக்குழு உறுப்பினர் சையது, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் முன்னாள் எம்.எல்.ஏ. எஸ் குணசேகரன், வழக்கறிஞர் மருது ,சகாயம் மார்க்சிய கம்யூனிஸ்டு கட்சி ஒன்றியச் செயலாளர் மதி, விஸ்வநாதன், தேசியவாத காங்கிரஸ் மாவட்ட தலைவர் பெரோஸ்காந்தி ஆம் ஆத்மிகட்சி மாவட்டத்தலைவர் பெரியார் ராமு லயன்ஸ் சங்கம் சார்பில் பொறியாளர்சுந்தரமாணிக்கம் திராவிடர் கழகம் சார்பில் புகழேந்தி ம. தி.மு.க.சார்பில் தீபன் சக்கரவர்த்தி பொறியாளர் பாரதிதாசன்வர்த்தகசங்கம் சார்பில் பி.சுகர்ணோ உட்பட 500க்கும் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டார்கள். அவர்கள் அனைவரையும் போலீசார் கைது செய்தார்கள் .மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பி. கே .அரவிந்த் தலைமையில் கூடுதல் எஸ்.பி. நமசிவாயம் டி.எஸ்.பிக்கள் சிபி சக்கரவர்த்தி, ஆத்ம நாதன் பிரகாஷ் உட்பட ஏராளமான போலிசார் ரயில் நிலையத்தை சுற்றி பாது காப்புப் பணியில் ஈடுபட்டிருந்தார்கள்.

ரயில் மறியல் ஈடுபட்டவர்கள் சுமார் அரை மணி நேரத்திற்கு மேலாக மறியலில் ஈடுபட்டதால் அரை மணி நேரம் தாமதமாக ராமேஸ்வரம் ரயில் புறப்பட்டு சென்றது. 15தினங்களுக்குள் கோரிக்கைகளை நிறைவேற்றாவிட்டால் தொடர்போராட்டம் நடைபெறும் என்று நகர்கழகசெயலாளர் துரை. ஆனந்த் தெரிவித்தார்.

---

மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. மாணவர் அணி

# பகுதி, ஒன்றிய, பேரூர் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பொறுப்புகளுக்கான நேர்காணல்!

## மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. அறிவிப்பு!



கழகத் தலைவர் - முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. தலைமையில், மாநில மாணவரணி இணைச்செயலாளர் சி.ஜெரால்டு மற்றும் துணைச்செயலாளர் திருமதி.ஜெ.வீரமணி ஆகியோர் முன்னிலையில், மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. மாணவர் அணியில் பகுதி, ஒன்றிய, பேரூர் அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள், பொறுப்புகளுக்கு விண்ணப்பித்தவர்களுக்கு நாளை (25. 09.2023 - திங்கள்கிழமை) காலை 10.00 மணியளவில் பசுமலை கோபால்சாமி திருமண மண்டபத்தில் நேர்காணல் நடைபெற உள்ளது.

இந்நிகழ்வில் பகுதி, ஒன்றிய, பேரூர் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பொறுப்புகளுக்கு விண்ணப்பித்தவர்கள் அனைவரும் உரிய ஆவணங்களுடன் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**கோ.தளபதி எம்.எல்.ஏ.**
செயலாளர்
மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க.

---

உடல் உறுப்பு தானத்தில் - தமிழ்நாடு தொடர்ந்து முன்னணி!

# உடல் உறுப்பு தானம் செய்வோரின் இறுதிச் சடங்குகள் - இனி அரசு மரியாதையுடன் நடைபெறும்!

## வலைதளப் பதிவில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, செப். 24-

உடல் உறுப்பு தானத்தில் தமிழ்நாடு தொடர்ந்து முன்னணி மாநிலமாக விளங்கி வருவதையொட்டி, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று விடுத்த சமூக வலைதளப் பதிவில்,

**"உடல் உறுப்பு தானம் செய்வோரின் இறுதிச் சடங்குகள், இனி அரசு மரியாதையுடன் மேற்கொள்ளப்படும்!" என்று அறிவித்தார்.**

**முதல்வர் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:**

**உடல் உறுப்பு தானத்தின் மூலம் நூற்றுக்கணக்கான நோயாளிகளுக்கு வாழ்வளிக்கும் அரும்பணியில் நாட்டின் முன்னணி மாநிலமாகத் தமிழ்நாடு தொடர்ந்து விளங்கி வருகின்றது.**

**குடும்ப உறுப்பினர்கள் மூளைச்சாவு நிலையை அடைந்த துயரச் சூழலிலும், அவர்களின் உடல் உறுப்புகளைத் தானமாக அளித்திட முன்வரும் குடும்பங்களின் தன்னலமற்ற தியாகங்களால் தான் இந்தச் சாதனை சாத்தியமாகியுள்ளது.**

**தம் உறுப்புகளை ஈந்து, பல உயிர்களைக் காப்போரின் தியாகத்தினைப் போற்றிடும் வகையில், இறக்கும் முன் உறுப்பு தானம் வழங்குவோரின் இறுதிச் சடங்குகள் இனி அரசு மரியாதையுடன் மேற்கொள்ளப்படும்!**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

மகளிர் இடஒதுக்கீடு மசோதா:

# நாடகமாடும் பி.ஜே.பி.க்கு மக்கள் தகுந்த பாடம் புகட்டுவார்கள்!

## மாநிலங்களவையில் டாக்டர் கனிமொழிஎன்.வி.என். சோமு பேச்சு!



*புதுடெல்லி, செப். 24 -*

தேர்தலை மனதில் வைத்து அவசரகதியில் மகளிர் இடஒதுக்கீடு மசோதாவை நிறைவேற்றியுள்ள பி.ஜே.பி.க்கு வரும் தேர்தலில் மக்கள் சரியான பாடம் புகட்டுவார்கள் என மாநிலங்களவையில் கழக உறுப்பினர் டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு பேசினார்.

நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்றங்களில் மகளிருக்கு 33 சதவிகித இட ஒதுக்கீடு அளிக்கும் சட்டத் திருத்த மசோதா மீதான விவாதத்தில் கலந்து கொண்டு அவர் பேசியதாவது:

பெண்களுக்கு அதிகாரமளிக்கும் விஷயத்தில் உலகத் தலைவர்களுக்கெல்லாம் முன்மாதிரியாகவும், அடையாளமாகவும் திகழ்ந்த எங்கள் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் மற்றும் கழகத் தலைவர் தளபதி மு.க. ஸ்டாலின் ஆகியோரால்தான் இந்த அவையில் உறுப்பினராகிப் பேசும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. தி.மு.கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சார்பில் இந்த மகளிர் இட ஒதுக்கீடு மசோதாவை நேற்றும் இன்றும் என்றும் என எப்போதும் ஆதரிக்கிறோம்.

சமூகப் புரட்சியாளரான தந்தை பெரியார் பெண் உரிமைக்காக ஒரு நூற்றாண்டுக்கு முன்பே போராடியவர். பெண் அடிமைத்தனத்தை ஒழித்தால் தான் ஒரு சமுதாயம் நிஜமான முன்னேற்றத்தை அடைய முடியும்; பெண்களிடம் சமையல் செய்யும் கரண்டியைப் பிடுங்கி விட்டு புத்தகம் கொடுத்தால் போதும் என்று சொன்னவர் பெரியார்.

மகளிருக்கான இடஒதுக்கீடு என்பது சலுகை அல்ல பெண்களின் உரிமை என்பதை உணர்ந்த இந்தத் தலைவர்களின் முன்னெடுப்பால் பெண்களுக்கான முக்கியத்துவத்தையும் முன்னுரிமையையும் பன்னெடுங் காலமாக வழங்கி வருகிறது தமிழ்நாடு.

ஆண்களுக்கு இணையாக பெண்களுக்கும் சம வாய்ப்பு வழங்குவதை நமது அரசமைப்புச் சட்டம் அடிப்படை உரிமையாகவே வலியுறுத்திச் சொல்கிறது. இந்தச் சட்டம் உருவாவதற்கு முன்பே பெண்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து சென்னை மாகாணத்தில் 1921 ம் ஆண்டே பெண்களுக்கு வாக்குரிமை அளித்த இயக்கம்தான் நீதிக்கட்சி. அதன் தொடர்ச்சியாக 1927ல் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி சட்டப் பேரவைக்கு முதல் பெண்மணியாகத் தேர்வானார்.

1996ல் தி.மு.க. அங்கம் வகித்த ஜனநாயக முற்போக்குக் கூட்டணியின் முதலாவது அரசுதான் இந்த மகளிர் இடஒதுக்கீடு மசோதாவை மாநிலங்களவையில் அறிமுகம் செய்தது. தொடர்ச்சியாக 2010ம் ஆண்டு இதே மாநிலங்களவையில் அதை அறிமுகம் செய்து நிறைவேற்றியதும் ஐ.மு. கூட்டணி அரசுதான். அந்த மசோதாவைத்தான் தங்கள் பதவிக் காலத்தில் ஒன்பதரை ஆண்டுகள் வீணடித்த பி.ஜே.பி. அரசு இப்போது மீண்டும் கொண்டுவந்திருக்கிறது.

வேளாண் மசோதா, சி.ஐ.ஏ. மசோதா, காஷ்மீர் தொடர்பான மசோதா, என சர்ச்சைக்குரிய பல மசோதாக்களை நிறைவேற்ற முடிந்த இந்த அரசால் முக்கியத்துவம் நிறைந்த இந்த மகளிர் இட ஒதுக்கீட்டு மசோதாவை மட்டும் உரிய நேரத்தில் நிறைவேற்ற முடியவில்லை.

பெண்களுக்கு முக்கியத்துவம் அளிப்பதில் தி.மு.க. எந்தளவுக்குமன பூர்வமாக இருந்து செயலாற்றியது என்பதற்கு சில உதாரணங்களைச் சொல்கிறேன்... உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 33 சதவிகிதம் இட ஒதுக்கீடு அளித்து சட்டம் நிறைவேற்றி பின்னாளில் அது 50 சதவிகிதமாக உயர வழிவகுத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். சொத்தில் பெண்களுக்கு சரிபாதி உரிமை அளித்து பொருளாதார ரீதியாக அவர்களை பாதுகாப்பாக வைத்திருந்ததும் அவரே.

பெண்களுக்கு கல்வி உதவித்தொகை, திருமண உதவித் தொகை, பேருந்துகளில் கட்டணமில்லா பயணச் சலுகை என பல திட்டங்களை அமல்படுத்தி வருவது தி.மு.கழக அரசுகள்தான்.

பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர், தளபதி ஸ்டாலின் என அனைவரது ஆட்சியிலும் பெண்களின் முன்னேற்றத்துக்கான மகத்தான பல நலத்திட்டங்கள் அமல்படுத்தப்பட்டன. இந்தியாவிலேயே முதல் முறையாக குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகை வழங்கும் தளபதி மு.க. ஸ்டாலினின்மகத்தான திட்டத்தை சமீபத்திய உதாரணமாகச் சொல்லலாம்.

அந்த வகையில் பெண்களுக்கான உரிமைகளைத் தந்து சமூகத்தில் அவர்களை உயர்ந்த இடத்தில் வைத்துப்பார்க்கும் அளவுக்கு தன்னிறைவு பெற்றவர்களாக அவர்களை ஆக்கியதில் முக்கியப் பங்கு வகிப்பது தளபதி ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசுதான். வாழ்க்கையின் எல்லா தளங்களிலும் பெண்களை இப்படி உயர்த்தி வைத்துப் பார்க்கும் திராவிட மாடல் அரசு ஒட்டுமொத்த இந்தியாவுக்கும் வழிகாட்டியாக, முன்னோடியாகத் திகழ்கிறது என்பதை நான் பெருமையோடு சொல்வேன்.

பெண்கள் முன்னேற்றம் என்பது இப்படி இருக்க வேண்டுமே தவிர, இந்த பி.ஜே.பி அரசு இப்போது கொண்டுவந்திருக்கிற மகளிர் இடஒதுக்கீடு மசோதா போல வேண்டா வெறுப்பாக இருக்கக் கூடாது. இந்த மசோதா இரு அவைகளிலும் இப்போது நிறைவேறி விட்டாலும் கூட இதன் பயனை அடைய இந்த நாட்டுப் பெண்கள் இன்னும் குறைந்தது ஐந்தாண்டுகாலம் காத்திருக்க வேண்டிய அவல நிலை தான் நீடிக்கிறது. இதற்கு மக்கள் தொகைகணக்கெடுப்பும் அதனடிப்படையிலான தொகுதி மறு சீரமைப்பும்தடைக்கல்லாக இருக்கிறது.

அதனால்தான் இந்த மசோதாவை பல ஆண்டுகளுக்கு முன்பே இந்த அரசு கொண்டுவந்து நிறை வேற்றியிருக்க வேண்டும் என்று விரும்பினோம். ஆனால் எங்களது 'இந்தியா' கூட்டணியின் வலுவான கட்டமைப்பு பி.ஜே.பி.யினருக்கு ஒருவித பயத்தை ஏற்படுத்தியதால்தான் அவசரகதியில் இதைக் கொண்டு வந்து நிறைவேற்றியிருக்கிறார்கள்.திருமண நிச்சய தார்த்தத்தை நடத்தி முடித்தி ருக்கிறீர்கள். திருமணம் எப்போது என்றுதான் தெரியவில்லை.

ஆனால் இந்த பி.ஜே.பி. அரசின் உள்நோக்கம் கலந்த திட்டங்களை மக்கள் நன்றாகப் புரிந்து வைத்திருக்கிறார்கள். எவருக்கும் முழுமனதோடு நல்லது செய்ய நினைக்காத இந்த அரசுக்கு வரும் தேர்தலில் தகுந்த பாடத்தை அவர்கள் புகட்டுவார்கள்.

இவ்வாறு கனிமொழி என்.வி.என். சோமு பேசினார்.

---

# தி.மு.க. மகளிரணி, மகளிர் தொண்டரணி புதிய மாவட்ட நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

## அணியின் செயலாளர்கள் ஹெலன் டேவிட்சன், நாமக்கல் இராணி அறிவிப்பு!

தி.மு.க மகளிரணி, மகளிர் தொண்டரணி புதிய மாவட்ட நிர்வாகிகள் அறிமுக கூட்டம் 26.09.2023 - செவ்வாய்க்கிழமை அன்று காலை 10 மணி அளவில் திருச்சி கலைஞர் அறிவாலயத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் கழக முதன்மை செயலாளர் நகராட்சி நிர்வாகம் & குடிநீர் வழங்கல்துறை அமைச்சர் கே.என்.நேரு சிறப்புரையாற்றுகிறார்.

பள்ளி கல்விதுறை அமைச்சர் திருச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் மற்றும் திருச்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர் தியாகராஜன் எம்.எல்.ஏ., திருச்சி மத்திய மாவட்ட கழக செயலாளர் வைரமணி, திருச்சி மாநகர மேயர், திருச்சி மேற்கு மாநகரச் செயலாளர் அன்பழகன் ஆகியோர் முன்னிலையில் இக்கூட்டம் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் அனைத்து மாநில நிர்வாகிகள், மகளிரணி, மகளிர் தொண்டரணி, பிரச்சாரகுழு, வலைதளகுழு, ஆலோசனை குழு உறுப்பினர் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்கிறார்கள்.

இந்த நிகழ்ச்சியில் முரசொலியில் அறிவித்த புதிய மாவட்ட நிர்வாகிகள், அனைவரும் கூட்டத்தில் தவறாமல் பங்கேற்று சிறப்பிக்குமாறு வேண்டுகிறோம்.

**ஹெலன் டேவிட்சன்,**
மாநில மகளிரணி
செயலாளர்

**நாமக்கல் இராணி,**
மாநில மகளிர் தொண்டரணி
செயலாளர்

---



சிவகங்கை மில் அனைத்து கட்சியினர் வர்த்தக சங்கம் மற்றும் பல்வேறு சமூக அமைப்புகளின் சார்பில் மாவட்ட தலைநகர் சிவகங்கையை புறக்கணிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் ரயில்வே துறையை கண்டறிந்து நகர் கழக செயலாளர். சி..எம்.துரை ஆனந்த் தலைமையில் ரயில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டார்கள் இதில் முன்னாள் எம்.எல்.ஏ. எஸ்.குணசேகரன், வழக்கறிஞர் ஜெயசிம்மன் உட்பட அனைத்துக்கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.



கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி நேற்று (23.09.2023) இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் குறு சிறு மற்றும் நடுத்தர தொழிற் நிறுவனங்கள் துறை, மாவட்ட தொழில் மையம், முன்னோடி வங்கி, ஊரக வளர்ச்சித் துறை, மகளிர் திட்டம், தாட்கோ, வாழ்ந்து காட்டுவோம் திட்டம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண்மை வணிகம், கால்நடைத்துறை, உள்ளிட்ட அரசுத் துறைகள் மற்றும் நிதி நிறுவனங்கள் ஒருங்கிணைந்து நடத்தும் தொழிற்கடன் வசதியாக்கல் முகாமினை தொடங்கி வைத்து 20 பயனாளிகளுக்கு ரூ.8.43 கோடி மதிப்பீட்டிலான வங்கிக் கடனுதவிகளை வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ச.வளர்மதி, ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் ஜெ.எல். ஈஸ்வரப்பன், மாவட்ட தொழில் மைய மேலாளர் ஆனந்தன், தாட்கோ மேலாளர் (பொ) திருமதி.அமுதாராஜ் மற்றும் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், துறைச்சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.



திண்டுக்கல் மாநகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு பெடரல் வங்கி நிர்வாகம் ரூ.15லட்சம் மதிப்பில் வழங்கிய 5 பேட்டரி வாகனங்களை ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி கொடியசைத்து துவக்கி வைத்தார். அருகில் மாநகர மேயர் இளமதி ஜோதிபிரகாஷ், துணைமேயர் ராஜப்பா, மாநகராட்சி ஆணையாளர் மகேஸ்வரி உட்பட பலர் உள்ளனர்.

### திருவண்ணாமலை மாவட்டத்தில்

# ஒன்றிய, நகர, பேரூர் தி.மு.க. விவசாய அணி பொறுப்புகளுக்கு விண்ணப்பித்தல்

### பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அறிக்கை

திருவண்ணாமலை. செப்.24-

திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்டத்தில் ஒன்றிய, நகர, பேரூர் தி.மு.க. விவசாய அணி பொறுப்புகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர், பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 02.10.2023 திங்கட்கிழமை மாலைக்குள், மாவட்ட கழக அலுவலகத்தில் ஒப்படைத்திட வேண்டும் என பொதுப்பணித்துறை அமைச்சரும், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினருமான எ.வ.வேலு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியதாவது:- தமிழ்நாடு முதலமைச்சரும், கழகத்தலைவருமான அண்ணன் மு.க.ஸ்டாலின் வழிகாட்டுதலின்படி, திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்டத்தில் தி.மு.க. விவசாய அணி ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பொறுப்புகளுக்கு, விண்ணப்பிக்க விரும்புவோர், திருவண்ணாமலை தெற்கு மாவட்டத்தை சேர்ந்தவர்கள், சாரோனில் உள்ள மாவட்ட தி.மு.க. அலுவலகத்திலும், திருவண்ணாமலை வடக்கு மாவட்டத்தை சேர்ந்தவர்கள், வந்தவாசியில் உள்ள மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில், விண்ணப்பங்களை பெற்று, அதனை உரிய ஆவணங்களுடன் பூர்த்தி செய்து, அந்தந்த மாவட்ட அலுவலகங்களில் 02.10.2023 திங்கட்கிழமை மாலைக்குள் ஒப்படைத்திட வேண்டும்.

நகர, ஒன்றியம், பேரூர் அமைப்பிற்கு ஒரு அமைப்பாளர், மூன்று துணை அமைப்பாளர்கள் நியமிக்கப்படுவர். இப்பொறுப்புகளில் உள்ள தற்போதைய நிர்வாகிகள், மீண்டும் அப்பொறுப்புகளுக்கு வர விரும்பினால், அவர்களும் விண்ணப்பிக்க வேண்டியது அவசியம்.

முழுமையாகப் பூர்த்தி செய்த விண்ணப்பங்களை அந்தந்த மாவட்டக் கழகத்தில் அக்டோபர் மாதம், 02 ஆம் தேதி திங்கட்கிழமை மாலை 06.00 மணிக்குள் ஒப்படைக்கவேண்டும்.

தாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தை முன்னிட்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

இவ்வாறு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### நல உதவிகள் வழங்கி - கழக அரசின் சாதனைகளை விளக்கி கொண்டாடுவோம்!

# கழக நெசவாளர் அணி சார்பில் - கலைஞர் நூற்றாண்டு விழா!

### மாவட்ட அமைப்பாளர்கள் கூட்டத்தில் தீர்மானம்! அமைச்சர்கள் க. பொன்முடி - ஆர்.காந்தி - அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி பங்கேற்பு! நன்னியூர் ராஜேந்திரன் தலைமை! ஓ.ஏ.நாகலிங்கம் வரவேற்புரை!

சென்னை, செப். 24-

திராவிட முன்னேற்றக் கழக நெசவாளர் அணியின் மாவட்ட, மாநகர, தலைவர், அமைப்பாளர்கள் கூட்டம் 12.09.2023 செவ்வாய்க்கிழமை அன்று சென்னை, தியாகராயர்நகர், அகார்டு ஓட்டலில் காலை 10.30 மணியளவில் மாநில நெசவாளர் அணியின் தலைவர் நன்னியூர் ராஜேந்திரன் தலைமையில், மாநில நெசவாளர் அணியின் துணைத் தலைவர் ஓ.ஏ.நாகலிங்கம் வரவேற்புரையாற்றிட மாநில நெசவாளர் அணியின் செயலாளர்கள் எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம், க.பழனிச்சாமி. தி.அன்பழகன், பரணி கே.மணி, நெல்லை சொ. பெருமாள், கே.எம்.நாகராஜன், சிந்துரவிச்சந்திரன், துணை செயலாளர்கள் வசந்தம் ஜெயக்குமார், மணிமாறன். கோவிந்தசாமி. ராமசாமி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் அமைச்சர் முனைவர்.க.பொன்முடி, தனது உரையில் கழக அரசின் சாதனைகள் குறித்தும், மகளிருக்கு முன்னுரிமை அளித்து அரசு செய்து வருகின்ற சாதனைகள் விளக்கியும் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் அனைத்துத் தொகுதிகளிலும் வெற்றிபெற நெசவாளர் அணியினர் பாடுபட வேண்டுமெனவும் பேசினார்.

கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தனது உரையில் 1953 முதல் கழகம் நெசவாளர்களுக்கு எவ்வாறு எல்லாம் துணை நின்று வருகின்றது என்று விளக்கமாகப் பேசினார்.

கைத்தறித் துறை மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, தனது உரையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சியில் நெசவாளர்களுக்குச் செய்த சாதனைகள், தற்போது முதல்வர் அவர்கள் நெசவுத் துறைக்குச் செய்கின்ற சாதனைகளைப் பட்டியலிட்டு விவரமாகப் பேசினார்.

சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு நன்றியுரை ஆற்றினார்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை நலத்திட்டங்கள் வழங்கியும், கழக அரசின் சாதனைகளை விளக்கியும், அனைத்து மாவட்டங்களிலும் நெசவாளர் அணி சார்பில் சிறப்பாகக் கொண்டாடுவது எனத் தீர்மானிக்கப்படுகிறது.

கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் அறிவுரைப்படி, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை சென்னை, மதுரை, திருச்சி, கோயம்புத்தூர் மற்றும் கும்பகோணம் ஆகிய 5 மண்டலங்களிலும் நெசவாளர்களின் கைவண்ணத்தில் நெசவு செய்த பொருட்களை வைத்து விற்பனை மற்றும் வர்த்தகக் கண்காட்சியை நவம்பர், 2023 மாதத்தில் சிறப்பாக நடத்திடுவது எனவும்,

அதேபோன்று நெசவுத் தொழில் அதிகமாக நடைபெறும் திருவள்ளூர், ஈரோடு, இராமநாதபுரம், கோயம்புத்தூர் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் ஒரு இடத்தைத் தேர்வு செய்து தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், நவீன நெசவு தொழில்நுட்பங்கள், கழிவுகளைக் கையாளுதல் மற்றும் சந்தைப்படுத்துதல் குறித்து விழிப்புணர்வு முகாம்களை 2023 டிசம்பர் மாதத்திலும் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி ஆலோசனைப்படி நடத்திடுவது எனவும்,

விழிப்புணர்வு முகாம் நடைபெறும் பகுதிகளில் தமிழக நெசவுத் தொழில் வளர்ச்சியில் கழக அரசின் பங்கு என்ற தலைப்பில் கழக பேச்சாளர்களைக் கொண்டு கருத்தரங்கங்கள் நடத்திடுவது எனவும் தீர்மானிக்கப்படுகிறது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா தொடர்பாக, கண்காட்சி நடைபெறும் இடங்களில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நெசவாளர்கள் மற்றும் நெசவுத்தொழில் வளர்ச்சிக்காக செய்த நலத்திட்டங்களை விளக்கும் படங்கள் வைக்கப்பட்டு, கழக அரசின் நெசவாளர்களுக்கான எதிர்கால திட்டங்களான ஜவுளி நகரம், ஜவுளிப்பூங்காக்கள் குறித்த காணொலி படங்கள் காட்சிப்படுத்துதல் எனவும், கண்காட்சியில் கலந்துகொள்பவர்கள் பிளாஸ்டிக்கை தவிர்த்து, சுற்றுச்சூழலுக்கு உகந்த பருத்தி துணிப்பைகளை பயன்படுத்துவதை ஊக்குவிக்கும் வகையில் "மீண்டும் மஞ்சப்பை திட்டத்திற்கு" வலுச்சேர்க்கும் விதமாக பருத்தி நூலில் நெசவு செய்யப்பட்ட பைகளில் கலைஞர் நூற்றாண்டு இலச்சினை பொறித்து வழங்கிடுவது எனவும் தீர்மானிக்கப்படுகிறது.

நெசவாளர் அணியின் செயல்பாடுகள் மேம்பட மாவட்ட, மாநகர அளவில் நிர்வாகிகளை நியமனம் செய்த கழகத்தலைவர், அவர்களுக்கு மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்ற அதே நேரத்தில், புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ள மாவட்ட மாநகர நெசவாளர் அணி நிர்வாகிகளுக்கு மாநில நெசவாளர் அணிவாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறது.

இவ்வாறு அக்கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# தி.மு.க. மாணவர் அணி நகர, பகுதி, ஒன்றிய, பேரூர் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பொறுப்புகளுக்கான முதற்கட்ட நேர்காணல்!

### மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன், எம்.எல்.ஏ. அறிவிப்பு!

கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கழக மாணவர் அணியில் நகர, பகுதி, ஒன்றிய, பேரூர் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பொறுப்புக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்காணலை, அந்தந்த மாவட்டத்தில் கழக மாணவர் அணியின் மாநில நிர்வாகிகள் நடத்தவுள்ளனர்.

மாவட்டக் கழக செயலாளர்களுடன் கலந்துப் பேசி முடிவெடுத்ததன் அடிப்படையில் கீழ்காணும் பட்டியல் படி நேர்காணல் நடைபெறவுள்ளது.

| நாள் | கழக மாவட்டம் | நேர்காணல் நடத்தும் மாநில நிர்வாகிகள் |
| --- | --- | --- |
| 25.09.2023 மற்றும் 26.09.2023 | மதுரை மாநகர் | சி.ஜெரால்டு ஜெ.வீரமணி |
| | மதுரை வடக்கு | |
| | மதுரை தெற்கு | |
| 26.09.2023 | சென்னை மேற்கு | மன்னை த. சோழராஜன் பூர்ணசங்கீதா |
| 27.09.2023 | சென்னை தென் மேற்கு | |
| 28.09.2023 | திருப்பத்தூர் | சேலம் ரா. தமிழரசன் கா.அமுதரசன் |

நேர்காணலில் கலந்துகொள்ள வரும் விண்ணப்பதாரர்கள் ஒவ்வொருவரும் தங்களுடைய வயதை நிரூபிப்பதற்கான கல்விச் சான்றிதழ், ஆதார் அட்டை, கழக உறுப்பினர் அட்டை, மாணவர் அணி போன்ற கழக அமைப்புகளில் ஏற்கனவே பணியாற்றியிருந்தால், அது தொடர்பான புகைப்பட தொகுப்பு மற்றும் ஆவணங்களைக் கொண்டு வருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 22.9.2023

சி.வி.எம்.பி.எழிலரசன், எம்.எல்.ஏ.
செயலாளர்
தி.மு.க. மாணவர் அணி



விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினரும், மாநில மருத்துவ அணி இணைச் செயலாளருமான டாக்டர்.இரா.இலட்சுமணன் விழுப்புரம் தொகுதி, கண்டமங்கலம் மேற்கு ஒன்றியம், சிறுவந்தாடு, காந்தி நகர், ராஜேஸ்வரி–கணேசன், பாஸ்கர்–பஞ்சவர்ணம், சீனுவாசன்–சவிதா ஆகியோரின் வீடுகள் எரிந்து சேதமானதை அறிந்து நேரில் சென்று பார்வையிட்டு, அத்தியாவசிய பொருட்கள் மற்றும் நிதி உதவி அளித்து ஆறுதல் கூறினார். உடன் கண்டமங்கலம் மேற்கு ஒன்றிய செயலாளர் வி.ஜி.பிரபாகரன், வட்டாட்சியர் வேல்முருகன், மாவட்ட பிரதிநிதி பி.எம்.சரவணன், அவைத்தலைவர் அசோக்குமார், சக்திவேல், பாபு, கிருஷ்ணராஜ், மணிகண்டன், கோபால், சேகர், தரணிகுமார், கணேசன், ஜீவா, காளிதாஸ், சரத், செந்தமிழன் மற்றும் பலர் உள்ளனர்.

# பாசிசமா! நாசிசமா! சர்வாதிகாரமா!

செப்டம்பர் 2, அமைச்சர் உதயநிதிசனாதனத்தை ஒழிக்க வேண்டும் என்று பேசியதை இந்து மதத்திற்கு எதிராக பேசியதாக பொய்யைபரப்பிவிட்டனர். அதுஎன்ன சனாதன தர்மம்? தர்மம் என்ற வார்த்தையை இழிவுபடுத்தி மதவெறியர்கள் சனாதனத்தோடு சேர்த்து பேசி வருகின்றனர்.

சனாதனம் ஆண்டு ஆண்டு காலமாக பெண்களை, உயர்சாதி இல்லாதவர்களை குறிவைத்து தாக்குகிறது. குழந்தை திருமணம், உடன்கட்டை ஏறுதலை ஆதரிப்பதோடு, விதவைத் திருமணத்தை எதிர்க்கிறது. இதைத் தான் கொரோனா போன்ற சில நோய்களோடு ஒப்பிட்டு ஒழிக்க வேண்டும் என்று அமைச்சர் உதயநிதி பேசினார். இந்த பேச்சைக் கேட்க தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் இல்லையே என்ற போதும் அவர்கள் வடிவில் கழகத் தலைவர் தளபதி அவர்கள் பார்த்தார், பாராட்டினார்.

இந்தப் பேச்சை இனப்படுகொலை பேச்சு என்று பா.ஜ.க. அமித் மாளவியா வதந்தியை கிளப்பி அதன் மூலம் இந்து மக்களின் வாக்குகளை பெற முடியாதா என்று விஷத்தைக் கக்கியுள்ளார். இன்று மதவெறியோடு பேசும் மோடி, அமித்ஷா உட்பட அனைவரும் தமிழ் மக்கள் இலங்கையில் இனப்படுகொலைக்கு ஆளாக்கப்பட்ட போது இந்துக்களை கொல்லாதீர்கள் என்று தடுக்க முயன்றார்களா. கொன்று குவித்த மகிந்த ராசபக்சேவுக்கு மோடி பதவி ஏற்பு விழாவுக்கு அழைப்பு விடுத்தார்.

சனாதனத்தை தந்தை பெரியார், டாக்டர் அம்பேத்கர் போன்ற பலர் எதிர்த்ததனால் தான் இன்று மோடியும், அமித்ஷாவும் இப்படிப்பட்ட உயர்ந்த பதவிகளுக்கு வர முடிந்தது என்பதை புரிந்துக் கொள்ளட்டும். அமைச்சர் உதயநிதி சனாதனத்தை பற்றி கூறிய வார்த்தையில் மிகவும் உறுதியாக உள்ளார். அது திராவிட இயக்க கொள்கை. சனாதனத்தைப் பற்றி பலர் பேசி விட்டதால் இதற்கு மேல் எழுத வேண்டாம் என்று தவிர்க்கிறேன்.

கடந்த 2014லிருந்து இந்திய நாட்டை ஆளுகின்ற ஒன்றிய பா.ஜ.க. அரசு எந்தந்த விதத்தில் என்னென்ன துறைகளில் முன்னேற்றம் கண்டது அதனால் மக்கள் கண்ட பலன் என்ன? என்பதை மக்களிடம் எடுத்துச் சொல்வதற்கு பா.ஜ.க.வை சேர்ந்த எந்த ஒரு தலைவருக்கும் தைரியமும் கிடையாது, சரக்கும் கிடையாது.

ஜி20 தலைமை தாங்க பிரதமர் மோடிக்கு கிடைத்த அற்புதமான வாய்ப்பு அவரது ஆளுமைத்திறனுக்கு கிடைத்த வெற்றி! மோடியால் இந்தியா அடைந்தப் பெருமை என்று பா.ஜ.க.வினர் பெருமை பேசினர். ஜி20 கூட்டத்தில் கலந்து கொண்ட அமெரிக்க அதிபர் ஜோ பைடன் வியாட்நாமில் செய்தியாளர்களை சந்தித்த போது இந்தியாவில் ஜனநாயகம் இல்லை No religious freedom in India என்று கூறியுள்ளார். ஐ.நா. மனித உரிமைகள் ஆணையர் வோல்கர் டர்க் இந்தியாவில் சிறுபான்மை யினருக்கு பாதுகாப்பு இல்லை வன்முறைகளை எதிர்கொள்கின்றனர். இஸ்லாமியர் மட்டுமின்றி மற்ற சிறுபான்மையினரும் இந்தியாவில் பாதுகாப்புடன் இல்லை என்று கண்டித்து 12.09.2023ல் பேசியுள்ளார். இந்த ஜாதி மத பாகுபாட்டால் மக்கள் பாதிக்கப்படுவதைப் பார்த்து தான் அமைச்சர் உதயநிதி சனாதனம் ஒழிக்கப்பட வேண்டும் என்றார்.

நாடாளுமன்றத்திற்கு வருகை தந்து எதிர்க்கட்சிகள் எழுப்பும் கேள்விகளுக்கு பதில் சொல்லாமல் வருகை தருவதை தவிர்ப்பதையே வழக்கமாக கொண்டிருக்கிறார் பிரதமர் நரேந்திர மோடி. நாட்டின் பல பகுதிகளில் மதக்கலவரத்தால் மக்கள் வெட்டிச் சாகடிக்கப்பட்டு வருகிறார்கள். பெண்கள் குத்துயிரும், குலையுயிருமாக தாக்கப்பட்டு ஆயிரக் கணக்கில் கொல்லப்படுகிறார்கள். இத்தகைய படுபாதகச் செயல்கள் பட்டப்பகலில் பகிரங்கமாக நடக்கிறது.

இதற்கெல்லாம் பதில் சொல்ல வேண்டிய தகுதி படைத்த 56 இஞ்ச் மார்புக் கொண்ட நரேந்திர மோடி 36 நொடி பாராளுமன்ற கட்டிடத்திற்கு வெளியே மணிப்பூர் சம்பவங்களால் வேதனைப்படுவதாகவும் அவமானப்படுவதாகவும் கூறி விட்டு எங்கு போய் பதுங்கிக் கொண்டார் என்பதே தெரியவில்லை.

தனது கிட்டதட்ட பத்து ஆண்டு கால ஆட்சியில் பத்திரிகையாளர்களை பார்த்து அவர்களது கேள்விகளுக்கு பதிலே சொல்லாத ஒரே இந்திய பிரதமர் மோடிதான். எதிர்கால தலைமுறை தெரிந்து கொள்ள வேண்டிய மோசமான வரலாறாகும்.

ஜவஹர்லால் நேரு, இந்திரகாந்தி, மொரார்ஜி தேசாய், ராஜீவ் காந்தி, வி.பி.சிங், தேவ கௌவுடா, குஜ்ரால், மன்மோகன் சிங், ஏன் மௌன பிரதமர் என்று வர்ணிக்கப்பட்ட நரசிம்மராவ் கூட அவர்களுக்கு எதிரான பல்முனைத் தாக்குதல்களுக்கு நாடாளுமன்றத்திற்கு வருகை தந்து பதிலளித்துள்ளார்கள்.

ஆனால் பாராளுமன்றத்திற்கு வருகை தராமல் பாராளுமன்ற உறுப்பினர்களின் கேள்விகளை எதிர்கொள்ளத் தெம்பில்லாத பிரதமர் இருந்தாரென்றால் அது பிரதமர் நரேந்திரமோடி தான். அவரது சமீபத்திய அமெரிக்கப் பயணத்தின் போது ஒரு பெண் நிருபர் கேட்ட ஒரே கேள்விக்கும் ஒழுங்கான பதிலை சொல்ல முடியாமல் உளறிக் கொட்டி இந்தியாவிற்கே தலைகுனிவை ஏற்படுத்தினார்.

இந்தியாவில் சிறுபான்மையினருக்கு பாதுகாப்பு இருக்கிறதா? இதற்கு மோடியின் பதில் என்ன? என்று சமத்துவமும் மதச்சார்பின்மையும், சகோதரத்துவமும் தினம் தினம் சாகடிக்கப்படுகின்றன என்பதைத் தானே ஒபாமா கூறினார். இதற்கு நம் பிரதமர் மோடி என்ன பதில் சொன்னார்? இதுவரை இல்லை.

ஆனால் கழகத் தலைவர் தளபதி 2019ல் என்ன நிலை எடுத்தாரோ அதில் இன்றுவரை உறுதியாக இருக்கிறார். பல்வேறு கருத்து வேறுபாடுகள் முரண்பாடுகள் கொண்ட கட்சித் தலைவர்களையெல்லாம் ஒரே பாதையில் ஒன்றாக நாம் பயணித்து ஜனநாயகத்தை காக்க வேண்டும் சர்வாதிகாரத்தை விரட்ட வேண்டும் என்று இந்தியா கூட்டணியை உருவாக்கியதில் முக்கிய பங்காற்றி வருகிறார். அதனால் தான் தி.மு.க.வின் மீது மத்திய பிரதேசத்திலும் மற்ற வடமாநிலங்களிலும் தனது நிகழ்ச்சிகளில் தன்னுடைய கோபத்தை, வெறுப்பை பிரதமர் மோடி காட்டி வருகிறார்.



**வி.பி.கலைராஜன்,**
கழக இலக்கிய அணிச் செயலாளர்

மோடியின் ஆழ்மனதில் இருந்திடும் அழுத்தம் அவர் சுதந்திர தின விழாவில் கொடி ஏற்றும் போது அடுத்த ஆண்டும் நானே தேசிய கொடியை ஏற்றுவேன் என்று கூறியுள்ளார். இப்படி அவரைப் பேச வைத்தது யார்? இந்தியா கூட்டணி தான். இந்திய பிரதமருக்கு இந்தியா என்றாலே தூக்கம் வர மறுக்கிறது. இந்தாண்டு பிரதமர் மோடி ஏற்றிய தேசியக் கொடிக் கூட சுதந்திர தினத்தன்று பறக்க மறுத்தது.

உத்தரகாண்ட், டில்லி, இமாச்சலப் பிரதேசம் போன்ற வடமாநிலங்களில் ஓயாத மழையால் வீடுகள் தரை மட்டமாகின, பலர் உயிர் இழந்தனர். ஆனால் பிரதமர் போய் பார்க்கவில்லை.

அந்த மக்கள் இன்னலில் சிக்கி உயிருக்கு போராடிக் கொண்டிருக்கும் போது அமெரிக்கா, பிரான்ஸ் என்று 8 அயல் நாடுகளுக்கு இன்பச் சுற்றுலா சென்று வருகிறார். இத்தகைய மோடியின் செயல் நியாயமானதா? தர்மமானதா?

மக்கள் துன்பத்தில் துவளும் போது மக்களிடம் செல், மக்களுக்காக பணியாற்று, மக்களோடு வாழ், மக்களிடம் கற்றுக்கொள், ஜாதியால் மதத்தால் மக்களை பிளவுபடுத்துவதை தடுத்திட செய். சகோதரத்துவத்தை வளர்த்தெடு என்று சொன்னவர் தான் முத்தமிழறிஞர் கலைஞரை நமக்கு தந்து விட்டு சென்ற அறிஞர் அண்ணா. அதனால் கலைஞர் தன் உதடுகள் அதிகமாக உச்சரித்த சொல் அண்ணா! அண்ணா! அண்ணா! என்றார். அதனால் தான் இன்றும் அண்ணா வாழ்ந்து வருகிறார்.

விவசாயிகள் மூன்று கோரிக்கைகளை முன்வைத்து போராட்டம் நடத்தினர். அதில் முக்கிய கோரிக்கை குறைந்த பட்ச ஆதார விலையை நிர்ணயிக்க வேண்டும் என்பதாகும். இதில் தாங்கள் ஆட்சிக்கு வந்தால் விவசாய உற்பத்திக்கான விலையை இருமடங்காக உயர்த்துவோம் என்று நரேந்திர மோடி தனது ஜீம்லாவை அவிழ்த்து விட்டார். ஆனால் நிறைவேற்றவில்லை.

கடுமையான மழையிலும், குளிரிலும், சுட்டெறிக்கும் வெயிலிலும், தாங்க முடியாத சூட்டிலும் விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த ஆண்களும், பெண்களும், குழந்தை குட்டிகளோடு சாலையில் நின்று போராடினார்கள். எத்தனை நாட்கள்? ஒரு நாளா? இரண்டுநாளா? இல்லை இல்லை ஒன்றரை ஆண்டுகள் உறுதியாக நின்று போராடினார்கள்.

மக்கள் மீது பற்றுள்ளவராக தன்னைக் காட்டிக் கொள்ள விரும்பும் பிரதமர் மோடி போராடிய விவசாயிகளை ஒரு நாளாவது போய் பார்த்திருப்பாரா? போராட வேண்டாம் என்று ஒரு அறிக்கை விட்டிருப்பாரா? உங்கள் கோரிக்கைகளை பரிசீலிக்கிறேன் என்று பா.ஜ.க.விற்கு சொந்தமான ஜீம்லா (பொய்)வையாவது அவிழ்த்து விட்டிருப்பாரா? மக்கள்படும் வேதனையைப் பார்த்து அவர்களை அலட்சியப்படுத்திய மோடியின் செயல் பாசிச முசோலினியின் போக்கைத் தவிர வேறென்ன? அந்த போராட்டத்தில் இறந்த விவசாயிகள் எத்தனை பேர் தெரியுமா? 708 பேர். இவர்களுக்கு மோடி என்ன பதில் சொல்லப் போகிறார்?

விவசாயிகள் வருடக்கணக்காக போராடுகிறார்களே 500க்கும் மேற்பட்டவர்கள் இதுவரை இறந்து போயுள்ளனரே என்று பா.ஜ.க.வை சேர்ந்த ஆளுநர் சத்தியபால் மாலிக் பிரதமர் மோடியிடம் கூறியபோது மோடி அகங்காரத்துடன் எனக்காகவா இறந்தார்கள், சாகட்டும் என்று திமிரோடு கூறியுள்ளார் என்பதை ஆளுநர் வருத்தத்துடன் தெரிவித்துள்ளார்.

பஞ்சாப், உ.பி. மற்றும் சில மாநில தேர்தல்கள் மோடியை இறங்கி வர வைத்து மூன்று வேளாண் சட்டங்களை திரும்பப் பெற செய்தது. அன்றைக்கு விவசாயி களுக்கு எதிராக அ.தி.மு.க. மூன்று வேளாண் சட்டங்களையும் ஆதரித்து ஜெ.அம்மையாருக்கும் விவசாயிகளுக்கும் துரோகம் இழைத்தது.

அதேபோல் இந்தியாவிற்கு ஆசியா, ஒலிம்பிக், உலக, சர்வதேச போட்டிகளில் பதக்கங்களை பெற்றுத்தந்த வீராங்கனைகளுக்கு மல்யுத்த சம்மேளன தலைவர் பிரிஜ்பூஷன் சரண் சிங் பா.ஜ.க. எம்.பி. பாலியல் தொல்லைக் கொடுத்து வந்தார். இப்படிப்பட்ட வன்கொடுமையாளர் மீது போக்சோ சட்டத்தில் வழக்குப் பதிவு செய்யப்படவில்லை. பஜ்ரங் புனியா, சாக்சி மாலிக், சரிதாமோர், ரவிதாஹீயா, அன்சுமாலிக் போன்ற முப்பதுக்கும் மேற்பட்ட வீரர்கள், வீராங்கனைகள் மூன்று மாதங்கள் பிரஜ்பூஷன் சரண் சிங்கை கைது செய்ய வேண்டும், அவரை பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுத்தும் எந்த பயனும் இல்லை. விசாரித்த குழுவும் பிரிஜ்பூஷன் சரண் சிங் குற்றவாளி என்று அறிவித்த பின்னும் அவர் மீது ஒன்றிய அரசு என்ன நடவடிக்கை எடுத்தது?

அதற்கும் பிரதமர் மோடி எப்போதும் போல் மௌனம் தான் சாதித்தார். விளையாட்டு வீராங்கனைகளை அழைத்துப் பேசவில்லை அலட்சியப் படுத்தப்பட்டார்கள், அசிங்கப்படுத்தப் பட்டார்கள். ஆனால் பிரதமர் மோடி வாய்திறக்கவும் இல்லை கண்டனம் தெரிவிக்கவும் இல்லை. மாறாக பிரிஜ்பூஷன் சரண் சிங் எம்.பி.க்கு ஆதரவாகவே இருந்து தன்னை ஹிட்லரின் நாசிக தலைவராக காட்டிக் கொண்டார். இதன் விளைவு வரும் 2024 நாடாளுமன்ற தேர்தலில் ஹரியானாவில் பா.ஜ.க. விற்கு மக்கள் தக்க பதிலடி தருவார்கள்.

அதேபோல் மூன்று மாதங்கள் மணிப்பூர் மாநிலம் இனப்படுகொலைக்கு ஆளாகியுள்ளது. இரண்டு ஒக்கிஇன பழங்குடி இனப் பெண்களை காவல்துறையினரே பிடித்து மைதேயி இன இளைஞர்களிடம் பிடித்துக் கொடுக்க ஊர்வலமாக நிர்வாணமாக அழைத்துச் செல்லப்பட்டு கற்பழிக்கப் பட்டுள்ளனர். இப்படி ஆயிரக்கணக்கான பழங்குடி இன பெண்கள் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப் பட்டுள்ளனர். இந்த கட்டுரையை எழுதும் நேரத்திலும் மூன்று ஒக்கி பழங்குடியினர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இதற்குப் பெயர்தான் இனப்படுகொலை. இது தான் சனாதனம். இதைத் தான் ஒழிக்கப்பட வேண்டும் என்று கூறுகிறார் அமைச்சர் உதயநிதி.

பழங்குடி இனத்தைச் சேர்ந்த திரௌபதி முர்முவை குடியரசுத் தலைவராக்கி அவரை சாட்சியாக வைத்து அந்த இனப்படுகொலைக்கு ஆளாக்கப்படுகிறது. ஒக்கி, நாகா, ஜோ இன பழங்குடி மக்கள் 200க்கும் மேற்பட்டோர் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

இதைப்பற்றி நம்பிக்கை இல்லா தீர்மானத்தில் பேச வந்த மோடி தன் இரண்டே கால்மணி நேர பேச்சில் எதிர்கட்சிகள் வெளியேறிய பின்னர் 3 நிமிடங்கள் மட்டும் ஒப்புக்காக மழுப்பி பேசியுள்ளார். நாடாளுமன்றத்தில் வந்து எதிர்கட்சிகள் கேள்விகளை எதிர்கொள்ள முடியாதவருக்கு எதற்கு பிரதமர் பதவி? சாதாரண குடும்பத்தில் பிறந்தவர் என்று கூறிக் கொள்பவர் மணிப்பூரில் சாதாரண மலைவாழ் மக்கள் மீது பரிதாபப்படாதது ஏன்? 500க்கும் மேற்பட்ட கிறிஸ்தவ கோயில்கள் இடிக்கப்பட்டுள்ளன. இதிலும் இதுநாள் வரை பிரதமர் மோடி மணிப்பூர் செல்லவில்லை? ஒரு அறிக்கைவிடவில்லை. இதற்கு பேர் என்ன சர்வாதிகாரம் தானே! ஆக பாசிசம்! நாசிசம்! சர்வாதிகாரத்தின் கோர முகமே மோடியின் இன்றைய ஒன்றிய பா.ஜ.க. அரசின் உடையது.

இது உங்களுக்கான உதவித்தொகை அல்ல உரிமைத்தொகை!

# உங்களில் ஒருவனான ஸ்டாலின் வழங்கும் உழைப்புத் தொகை!

கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட பயனாளிகளான 1 கோடியே 6 லட்சம் மகளிருக்கு

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

**சென்னை, செப். 24–**

**உங்களில் ஒருவனான ஸ்டாலின் வழங்கும் உழைப்புத்தொகை என்றும், இது உங்களுக்கான உதவித் தொகை அல்ல உரிமைத் தொகை என்றும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட பயனாளிகளான ஒரு கோடியே 6 லட்சம் மகளிர்க்கும் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனித்தனியே கடிதம் எழுதியுள்ளார்.**

**இது குறித்து முதல்வர் அவர்களின் கடிதம் வருமாறு:–**

"தங்களது அன்புக் கட்டளையால் தமிழ்நாட்டின் முதலமைச்சராகத் தொண்டாற்றும் வாய்ப்பைப் பெற்ற உங்களின் அன்பு உடன்பிறப்பு முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் உங்களுக்கு எழுதும் கடிதம்.

பேருந்தில் மகளிருக்குக் கட்டணமில்லா விடியல் பயணம். அரசுப் பள்ளியில் படித்து உயர்கல்வி பயிலக் கல்லூரிக்கு வரும் புதுமைப் பெண்களுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் உதவித்தொகை. நகைக் கடன் ரத்து. மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடனுதவிகள். புதிய மகளிர் சுய உதவிக்குழுக்கள் உருவாக்கம் என மகளிருக்கு ஏராளமான திட்டங்களைச் செயல்படுத்தி வருவது 'திராவிட மாடல்' அரசு என்பதை நீங்கள் அறிவீர்கள். மகளிர் வாழ்க்கையில் மகத்தான மாற்றத்தை இத்திட்டங்கள் உருவாக்கி உள்ளன.

இந்த வரிசையில் மற்றுமொரு மாபெரும் திட்டம்தான் தேர்தலுக்கு முன்னதாக நாங்கள் அளித்த வாக்குறுதிகளில் மிகமிக முக்கியமான 'மகளிர் உரிமைத் திட்டம்'. இந்தத் திட்டத்தின் பயனாளியாகத் தகுதியின் அடிப்படையில் தாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளீர்கள் என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இனி மாதம்தோறும், ஆயிரம் ரூபாய் தங்களின் வங்கிக் கணக்கில் தமிழ்நாடு அரசால் நேரடியாக வரவு வைக்கப்படும். பொருள் ஈட்டும் ஒவ்வொரு ஆணுக்குப் பின்னாலும், அவரது தாய், சகோதரி, மனைவி, மகள் எனப் பெண்களின் பல மணிநேர உழைப்பு இருக்கிறது. இப்படி கணக்கில் கொள்ளப்படாத பெண்களின் உழைப்புக்குத் தரப்படும் அங்கீகாரமே இத்தொகையாகும். பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கி, உள்ளாட்சி அமைப்புகளிலும் பணியிடங்களிலும் இடஒதுக்கீடு வழங்கிய மகளிர் முன்னேற்ற மாண்பாளர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டில் இந்தத் திட்டம் தொடங்கப்படுவதால், 'கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்' எனப் பெயரிடப்பட்டுள்ளது. இது உங்களுக்கான உதவித் தொகை அல்ல, உரிமைத் தொகை. உங்களில் ஒருவனான ஸ்டாலின் வழங்கும் உழைப்புத் தொகை.

உங்களுக்கு மீண்டும் எனது மனமார்ந்த வாழ்த்துகள்!"

இவ்வாறு முதல்வர் அவர்கள் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இக்கடிதம் அனைவருக்கும் 'ஸ்பீட் போஸ்ட்' மூலம் அனுப்பப்பட்டுள்ளது.

நாமக்கல் – சேந்தமங்கலம் சாலையில் (கொண்டம்பட்டிமேடு)

# தமிழறிஞர் சிலம்பொலி செல்லப்பன் திருவுருவச் சிலை-அறிவகம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் – காணொலி வாயிலாகத் திறந்து வைத்தார்!

**நாமக்கல், செப். 24–**

**தமிழறிஞர் சிலம்பொலி செல்லப்பன் அவர்களின் திருவுருவச் சிலை, நாமக்கல் மாவட்டம் – கொண்டம்பட்டி மேட்டில் நிறுவப்பட்டுள்ளது.**

**இத்திருவுருவச் சிலையினை, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் காலை காணொலி மூலம் திறந்து வைத்து – விழா மலர் வெளியிட்டு வாழ்த்துரை வழங்கினார்.**

இவ்விழா பற்றிய விபரம் வருமாறு:–

தமிழறிஞர் சிலம்பொலி செல்லப்பன் சிலப்பதிகார அறக்கட்டளை நடத்தும் தமிழறிஞர் சிலம்பொலி செல்லப்பன் திருவுருவச் சிலை மற்றும் அறிவகம் திறப்பு விழா நாமக்கல் சேந்தமங்கலம் சாலையில் உள்ள சிவியாம்பாளையம் கொண்டம்பட்டி மேடு சிலம்பொலியார் நகரில் நடைபெற்றது.

விழாவில் குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், முனைவர் சாந்தலிங்க மருதாச்சல அடிகளார் ஆகியோர் அருளுரை வழங்கினர். விழாவில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செய லாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் வரவேற்புரை ஆற்றினார். பி.ஜி.பி. குழுமத் தலைவர் டாக்டர் பழனி ஜி.பெரியசாமி தலைமை தாங்கினார்.

விழாவில் வனத்துறை அமைச்சர் நாமக்கல் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.கே.பி.சின்ராஜ், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர்கள் நாமக்கல் பெ.இராமலிங்கம் சேந்தமங்கலம் கே.பொன்னுசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் தமிழறிஞர் சிலம்பொலி செல்லப்பன் திருவுருவச் சிலை மற்றும் அறிவகம் ஆகியவற்றை காணொலி வாயிலாக கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்து மலர் வெளியிட்டு வாழ்த்துரை வழங்கினார்.

நிகழ்ச்சியில் கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி பொதுச் செயலாளரும், திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினருமான ஈ.ஆர்.ஈஸ்வரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

விழாவில் சிலம்பொலி செல்லப்பன் சிலப்பதிகார அறக்கட்டளையின் இளங்கோ விருது மற்றும் ஒரு லட்சம் பொற்கிழியை சிலம்புச்செம்மல் புலவர் தமிழமுதன் பெற்றார். தமிழறிஞர்கள் முனைவர் மா.ராஜேந்திரன், முனைவர் மறைமலை இலக்குவனார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இறுதியாக சிலம்பொலி செல்லப்பன் சிலப்பதிகார அறக்கட்டளை செ.கொங்குவேள் நன்றி கூறினார்.

இந்நிகழ்ச்சிகளை கவிஞர் தமிழன் ராகுல்காந்தி நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.

அறிவகத்திற்கு சிவியாம்பாளையம் பூங்கோதை செல்லதுரை நிலம் வழங்கி உள்ளார். சிலை அமைப்பு குழு தலைவர் சு.குமாரசாமி, செ.ராஜேந்திரன், வை.சித்தார்த்தன், செயற்குழு உறுப்பினர்கள் சி.கா.செல்லப்பன், இரா.வெங்கடாசலம் ப.சம்பத்குமார், சி.கா.பழனிசாமி, மு.சேரலாதன், பூங்கோதை செல்லதுரை, இரா.அன்பழகன், ஆ.செல்வராஜ், சு.பெரியசாமி மற்றும் சிவியாம்பாளையம் ஊர் பொதுமக்கள், சிலம்பொலியாரின் சீர்மிகு மாணவர்கள், தமிழன்பர்கள் மற்றும் தமிழ் அமைப்புகள் ஆகியோர்

இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

இவ்விழாவில் நாமக்கல் மேற்கு மாவட்ட கழக செயலாளர் எஸ்.எம். மதுரா செந்தில், கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி தலைவர் தேவராஜன்,

சிலம்பொலி செல்லப்பன் இல்லத்தினர் நா.புட்பராசு, முனைவர் மணிமேகலை, குமாரவடிவு செ.தொல்காப்பியன், கு.இராமலிங்கம், மருத்துவர் கௌதமி, செ.கொங்குவேள், மருத்துவர் ஈஸ்வரி மருத்துவர் செ.ராமகிருஷ்ணன், நகைமுத்து உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

நெடுஞ்சாலைத்துறையின் மூலம்

# சாலைகள் பராமரிப்பு – தரமான சாலைகள்!

## அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு!

சென்னை, செப்.24-

சென்னை, கிண்டி நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில், நெடுஞ்சாலைத் துறையின் மூலம் சாலைகள் பராமரிப்பு மற்றும் தரமான சாலைகள் அமைப்பது குறித்து, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறை முகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு ஆய்வுக் கூட்டம் நடத்தினார்.

இது குறித்து அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு வருமாறு:-

சென்னை, கிண்டி நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில், நேற்று முன்தினம் (22.9.2023) நெடுஞ்சாலைத்துறையின் மூலம் சாலைகள் பராமரிப்பு மற்றும் தரமான சாலைகள் அமைப்பது குறித்து, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறை முகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில் அமைச்சர் உரையாற்றுகையில், சாலைகள் பராமரிப்பிற்கு தனி கவனம் செலுத்த வேண்டும் என்றும், தரமான பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும், முதலமைச்சர் அவர்கள் 19.9.2023 அன்று நடைபெற்ற ஆய்வு கூட்டத்தில் தெரிவித்தார்.

சாலைகளை பராமரிப்பது கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகின் முக்கிய பணியாகும். பராமரிப்பு பணிகளுக்கு அனைத்து பொறி யாளர்களும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும். முதலமைச்சரின் விபத்தில்லா தமிழகம் என்ற இலக்கை அடைய சாலைகள், பள்ளமில்லா சாலைகளாக பராமரிக்கப்பட வேண்டும். தேசிய நெடுஞ்சாலை ஆணைய சாலைகளாக இருந்தாலும், அவற்றில் குழிகள் (pot holes) இருப்பின் அதை ஆய்வு செய்து, சீர் செய்ய திட்ட இயக்குநர் மற்றும் மண்டல அலுவலர் ஆகியோரிடம் அறிவுறுத்த வேண்டும் என்று தெரிவித்தார்.

தமிழ்நாடு சாலை மேம்பாட்டு திட்டம், சென்னை-கன்னியாகுமரி சாலை மேம்பாட்டு திட்டம் போன்ற திட்டங்களில் செயல்படுத்தப்படும் சாலைகளில், தார் சாலை போடும் வரை போக்குவரத்துக்கு ஏற்றவாறு சாலைகளை பராமரிக்க வேண்டும். அவ்வாறு பராமரிக்கத் தவறும் பட்சத்தில், அது குறித்த தகவல்களை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகை சேர்ந்த பொறியாளர்கள், உடனடியாக கண்டறிந்து அதனைத் தலைமை பொறியாளர்களுக்கு தெரிவிக்க வேண்டும். சாலைகளில் உள்ள வேகத்தடைகளை வர்ணம் பூசி தேவையான அறிவிப்பு பலகைகள் அமைத்து, விபத்துக்கள் ஏற்படா வண்ணம் பராமரிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

சாலை பாதுகாப்பு பணிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். சாலையில் உள்ள மரங்களுக்கு கருப்பு வெள்ளை வர்ணம் அடித்தல், போன்ற பணிகளை செய்து விபத்து ஏற்படாத வண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டும். சாலை ஓரங்களில் உள்ள ஆபத்தான, உடையும் நிலையில் உள்ள மரக்கிளைகள் அகற்றப்பட வேண்டும். சாலைப் பணிகளை தரமாக செயல்படுத்துவதை தாரக மந்திரமாக கொண்டு, பொறியாளர்கள் பணியாற்ற வேண்டும். அனைத்து பணிகளுக்கும் பண பட்டுவாடா செய்யும்முன் தரக் கட்டுப்பாட்டு பிரிவு அலுவலர்களைக் கொண்டு தரத்தினை உறுதி செய்து கொண்ட பின்பே பண பட்டுவாடா செய்ய வேண்டும்.

ஏற்கனவே தேசிய நெடுஞ்சாலை அலகில் உள்ளதுபோல் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகு மற்றும் பிற அலகுகளில் செயல்படுத்தப்படும் பணிகளிலும் தரக்கட்டுப்பாட்டு அலுவலர்களின் அறிவிக்கையை அளவு புத்தகங்களில் அளவீடு பதிவு செய்ய வேண்டிய அவசியம் குறித்து எடுத்துரைத்தார்.

மேம்பாட்டு பணிகளுக்காக ஒப்பந்ததாரர்களிடம் சாலைகளை ஒப்படைத்த பின், அச்சாலைகளில் ஏற்படும் நொடிகளை அவ்வப்போது சீர்செய்து, பணி முடிக்கும் வரை பள்ளமில்லா சாலைகளாக பராமரிக்க வேண்டிய பொறுப்பு அந்த ஒப்பந்த தாரருக்கு உள்ளது, அதை உறுதி செய்ய வேண்டியது அந்த பொறியாளரின் கடமையாகும், இவ்வாறாக இல்லாமல் அந்த ஒப்பந்ததாரர் தார் பணி செய்யும் வரை பள்ளங்களுடன் சாலைகள் வைத்துக் கொண்டிருப்பது அரசுக்கு அவப்பெயரை ஏற்படுத்துகிறது.

பணிகள் செயலாக்கத்தின்போது, சாலை பாதுகாப்புக்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்க வேண்டும். பணி நடைபெறும் இடங்களில் சாலை பாதுகாப்பு உறுதி செய்வதை சாலை பாதுகாப்பு அலகில் உள்ள பொறியாளர்கள் அவ்வப்போது ஆய்வு செய்து அதை உறுதி செய்ய வேண்டும். பணிகள் நடைபெறும் பொழுது விபத்துக்கள் ஏற்பட்டு அதனால் உயிரிழப்புகள் ஏற்படுவது தவிர்க்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

அமைச்சர் அவர்கள், நடைபெற்று வரும் அனைத்து பணிகளையும் மழைக்காலம் தொடங்குவதற்கு முன்பாகவே (அதாவது அக்டோபர் மாதம்) முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். குடிநீர் வாரியம், தமிழ்நாடு மின்சார வாரியம், மெட்ரோ, கழிவு நீரகற்று வாரியம் போன்ற பிற துறைகளுடன் ஒருங்கிணைந்து மழைக்காலம் தொடங்குவதற்கு முன்பாகவே சாலைகளில் தோண்டப்பட்ட பள்ளங்களின் மறுசீரமைப்புப் பணிகள் முடிக்கப்பட வேண்டும். பிற துறைகளுடன் ஒருங்கிணைந்து உடனடியாக பணிகளை செயலாக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அனுமதிக்கப்பட்ட சாலைகளில் தோண்டும் பணிகள் அனைத்திலும் அக்டோபர் மாதத்திற்குள் மறுசீரமைப்புப் பணிகள் முடிக்கப்பட வேண்டும். மழைநீர் வடிந்து செல்ல ஏதுவாக உயர்மட்ட புருவங் களை வெட்டுதல், தாழ்ந்த புருவங்களை நிரப்புதல் போன்ற பணிகளை செய்ய வேண்டும். பாலங்கள் மற்றும் சிறுபாலங்கள், வடிகால்களில் உள்ள செடிகள், முட்புதர்கள் போன்ற தடைகள் நீக்கப்பட வேண்டும்.

மலைப்பகுதிகளில் அமைந்துள்ள சாலைகளில் உள்ள (Catch pit) பிடிக்குழி, வடிகால் போன்றவற்றை மழைநீர் வடிந்து செல்ல ஏதுவாக நல்ல முறையில் பராமரிக்க வேண்டும். மழை பெய்தவுடன் கள ஆய்வு செய்து, எங்கு மழை நீர் தேங்குகிறது, எங்கு மழை நீர் சாலையைக் கடக்கிறது போன்றவற்றை ஆய்வு செய்து, அவற்றை தவிர்ப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

மின் அறுவை இயந்திரம், ஜெனரேட்டர், மின்சார நீரேற்று பம்புகள் மற்றும் லாரிகள் போன்ற அனைத்து இயந்திரங்களையும் உடனடியாகக் கொண்டு செல்ல ஏதுவாக தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். தேவை அடிப்படையில் மணல் பைகளைத் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். பேரிடர் மேலாண்மைத் திட்டம் மற்றும் கட்டுப்பாட்டு அறைகளைத் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். பாதிக்கப்படக்கூடிய இடங்களை அடையாளங்கண்டு முன்கூட்டியே தயாராக இருக்க வேண்டும். அவசர கால பணிகளுக்கு மாவட்ட நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையுடன் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். மழைக்காலத்தில் வாகன சுரங்கப்பாதைகள் மற்றும் பாதசாரிகளின் சுரங்கப் பாதைகளில் நீர் தேங்குவதைத் தவிர்க்க தேவையான நீரேற்று பம்புகள் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும் என்று அமைச்சர் அறிவுறுத்தினார்கள்.

மேலும், அண்ணா சாலை, பூந்தமல்லி சாலை, ஜவகர்லால் நேரு சாலை, கத்திப்பாரா முதல் கோயம்பேடு வரை, ஜெனரல் பீட்டர்சன் சாலை, காந்தி இர்வீன் பாலம், திருவள்ளுவர் சாலை, இராமபுரம் சாலை, கொளத்தூர் சாலை, சென்னை தினத்தந்தி அலுவலகம் முன்பாக போன்ற இடங்களில் நடைபெறும் பணிகளை போர்க்கால அடிப்படையில் அடுத்த 15 நாட்களுக்குள் முடிக்க வேண்டும்.

இந்த வருடம் நிரந்தர வெள்ள சீரமைப்பு பணிகளுக்காக 46 பணிகளுக்கு 105 கோடி ரூபாய் மதிப்பில் நிர்வாக அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்த அனைத்துப் பணிகளும் அக்டோபர் மாதத்திற்குள் முடிக்கப்பட வேண்டும். கொளப்பாக்கம் சாலை, அணை ஏரி போன்ற இடங்களில் நடைபெற்று வரும் பணிகள் விரைந்து செயல்படுத்தி முடிக்கப்பட வேண்டும். மழை நீர் வடிகால் பணிகளை கண்டறிந்து விரைந்து முடிக்கப்பட வேண்டும். மேலும் இந்த ஆண்டு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ள வடிகால்களில் வண்டல் மண்ணை பிடிக்கும் குழி பணிகளில் சிறப்பு கவனம் செலுத்தி விரைந்து முடிக்கப்பட வேண்டும். எச்சரிக்கை பலகைகள், தகவல் பலகைகள், ஆகியவற்றின் இணைப்புகளில் உறுதித்தன்மை சரிபார்க்க வேண்டும் என்றும் உத்தரவிட்டார்.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா கொண்டாட்டத்தை தொடர்ந்து செயல்படுத்த வேண்டிய 100 இடங்களில் மரக்கன்றுகள் நடுதல், 100 இடங்களில் சாலை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு கூட்டங்கள், 100 சிறு பாலங்களை புனரமைத்தல் போன்ற பணிகளை திட்டமிட்டவாறு செயல்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

இந்த வருடம் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்ட நபார்டு, சிஆர்ஐடிபி, சிஎம்டிபி, போன்ற பல்வேறு திட்டங்களில், அனைத்து அலகுகளில் உள்ள பணிகளுக்கு மதிப்பீடுகள் தயாரித்து, ஒப்பந்த புள்ளியில் கோரப்பட்டு, விரைவாக பணிகள் துவங்கப்பட வேண்டும் என அறிவுறுத்தினார்.

சாலைகளில் ஏற்படும் பாதிப்புகளை நெடுஞ்சாலைத்துறைக்கு தெரிவிக்க, ஒரு செயலி விரைவில் அறிமுகம் செய்யப்படும் என்று தெரிவித்தார்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்ட இயக்குநர் டாக்டர் எஸ்.பிரபாகர், நெடுஞ்சாலைத்துறை முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய இயக்குநர், அனைத்து தலைமைப் பொறியாளர்கள் மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தலைமைச் செயலகத்தில், நேற்று முன்தினம் (22.09.2023) நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்களை, சென்னை மற்றும் புதுச்சேரிக்கான பிரான்ஸ் நாட்டு துணைத் தூதர் திருமதி லிஸ் டால்போட் பரே (Tmt.Lise Talbot Barre) சந்தித்து 07.10. 2023 தேதி நடைபெறும் கலாச்சார அமைப்பின் 70 வது ஆண்டு விழாவிற்கு அழைக்கவும், தமிழ்நாடு மற்றும் பிரான்ஸ் இடையேயான பொருளாதார மற்றும் கலைபண்பாடு குறித்து பேசினார். இந்நிகழ்வின் போது, தூதரகத்தின் துணைத் தூதர் புரோனோ குயென் (Thiru Bruno Nguyen), பிரான்ஸ் தூதரகத்தின் ஊடக மற்றும் மரபு அலுவலர் திருமதி விஜயசரஸ்வதி சிவ நாராயணன் உடனிருந்தார்.

காளையார் கோவிலில் – பா.ஜ.க.தேசியச் செயலாளர்

# எச்.ராஜா உட்பட 3 பேர் மீது அவதூறு வழக்கு!

சிவகங்கை, செப். 24-

கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பாக காரைக்குடி மற்றும் காளையார் கோயில் விநாயகர் சிலையை ஆற்றில் கரைக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் காளையார்கோவிலில் நடைபெற்ற நிகழ்ச்சியில் முன்னாள் பா.ஜ.க. தேசிய செயலாளர் எச். ராஜா. முத்தமிழறிஞர் கலைஞர் முதல்வர் மு.க.ஸ்டாலின்

மீதும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மீதும் தரக்குறைவாகவும் அவமரியாதையாகவும் மற்றும் மத கலவரத்தை ஏற்படுத்திடும் வகையில் அவதூறாக பேசியதாக காளையார் கோயில் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர்வே.ஆரோக்கிய சாமி போலீஸில் கொடுத்த புகாரின் பேரில் காளையார் கோவில் போலிசார் ஹெச். ராஜா மீது இந்திய குற்றவியல் தண்டனைச் சட்டம் 153A, 294 , 295 ஏ ,505/2 ஆகிய நான்கு பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்தார்கள். இன்ஸ்பெக்டர் கணேசமூர்த்தி வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்.

இதேபோல் காரைக்குடியில் நடைபெற்ற ஊர்வலத்தில் மாவட்ட பா.ஜக. செயலாளர் நாகராஜன் இந்து முன்னணி மாவட்ட தலைவர் அக்னி பாலா ஆகியோர் மதக் கலவரத்தில் தூண்டும் வகையில் பேசியதாகவும் முத்தமிழறிஞர் கலைஞர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அமைச்சர் உதயநிதிஸ்டாலின் ஆகியோரை தரக்குறைவாக பேசியதாக காரைக்குடி நகரச் செயலாளர் என். குணசேகரன் காரைக்குடி போலீஸில் கொடுத்த புகாரின் பேரில் இருவர் மீதும் வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது.

# 2016ல் கழக நிர்வாகிகள் மீது அ.தி.மு.க. ஆட்சியின் பொய்வழக்கு!

## அனைவரையும் விடுவித்து நீடாமங்கலம் நீதிமன்றம் தீர்ப்பு!

திருவாரூர்,செப். 24 -

2016ம்ஆண்டில் அ.தி.மு.க. ஆட்சியின் அராஜகங்களை எதிர்த்து ஜனநாயக முறைப்படி ஆர்ப்பாட்டம் செய்த தி.மு.க. நிர்வாகிகள் விசு அண்ணாதுரை உள்ளிட்டவர்கள் மீது போடப்பட்ட பொய் வழக்குகளில் இருந்து அனைவரையும் விடுவித்து நீடாமங்கலம் நீதிமன்றம் தீர்ப்பு வெளியிட்டது.

திருவாரூர் மாவட்டம் நீடாமங்கலம் ஒன்றியத்தில் அன்றைய அ.தி.மு.க. ஆட்சியின் அராஜகங்களை எதிர்த்து அப்போதைய ஒன்றியச் செயலாளர் விசு அண்ணாதுரை தலைமையில் நடைபெற்ற ஜனநாயக முறைப்படியான ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற அப்போதைய ஒன்றிய செயலாளர் வை.மாயவநாதன், பேரூர் செயலாளர் ஆர்.ராஜசேகரன், மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் ராயபுரம் சுந்தர், காளச்சேரி கரிகாலன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மீது பல்வேறு பொய் வழக்குகள் போடப்பட்டன.





மதுரை தெற்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி நிர்வாகிகள் சந்திப்பில் தெற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சியில் நடைபெற்று வரும் மகளிர் உரிமைத் திட்டம், பள்ளிச் சிறுவர்களுக்கான காலை உணவு திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை பொதுமக்களிடம் எடுத்துக்கூற வேண்டுமென அறிவுறுத்தினார். இந்நிகழ்வில் மாவட்ட அமைப்பாளர் ஆர்.செல்வேந்திரன், ஒன்றியச் செயலாளர் கொ.தனபாண்டியன், அணி நிர்வாகிகள் எம்.கருப்பசாமி, எம்.மணிகண்டன், எஸ்.சுபாகரன், ஆர்.ஆனந்தன், சதீஷ்குமார், மு.கணேசன், ஜீ.கார்த்திக்குமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

முரசொலி பாசறை
சென்னை 24.09.2023

# கலைஞரும் நானும்

37

**“முத்தமிழறிஞர் கலைஞர் நம்மோடு பழகிய நாட்கள், நாம் அவரோடு பழகிய நாட்கள் அது அன்பின் நாட்கள். அதை எழுத்தால் எழுத முடியாது, பேச்சால் பேசிக்காட்ட முடியாது. மகத்தானது அந்த அன்பு” எனக் கலைஞருடனான தனது நினைவுகளைப் பகிர்கிறார் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்.**

■ குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்



## “மத நல்லிணக்கமே உயிர்த் துடிப்பு!”

“கடைக்கோடி தமிழனின் பந்தியில் பரிமாறப்படும் மொழியாக தமிழைக் கொண்டுவந்தது கலைஞரின் ஆளுமை. அவரை வாழ்த்துவதற்கும் போற்றுவதற்கும் அவ்வளவு காரணங்கள் உள்ளன. சமய நல்லிணக்கப் பணிகளில் குன்றக்குடி மடத்தின் பங்களிப்பு இல்லாமல் அவர் நடத்தியதில்லை. மறைந்த மகா சன்னிதானம் அவர்களிடம் காட்டிய அன்பைப் போலவே, நம்மிடமும் அன்பு பாராட்டியவர் கலைஞர்.

### கோரிக்கைகளுக்கு உடனே தீர்வு

தென்மாவட்டங்களில் சாதிக் கலவரம் நடந்த சூழலில்தான், முத்தமிழறிஞர் கலைஞரை முதன்முதலில் நாம் சந்தித்தோம். அமைதி முயற்சிகளுக்கு ஈடுபட வேண்டுகோள் விடுத்திருந்தார். அந்தப் பணிகளுக்குப் பின்னர் மதுரையில் அவர்களைச் சந்தித்தோம்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பணிகள் தொடர்பான அறிக்கையில், எரியாத மேற்கூரை கொண்ட வீடுகள் கட்டித் தரப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டிருந்தோம். அதைப் பார்த்த கலைஞர் அங்கேயே அதற்கான ஆணை பிறப்பித்தார்.

சாதிக் கலவரங்கள் ஏற்படாமல் இருப்பதற்காக நடத்தப்பட்ட பல கலந்தாய்வுக் கூட்டங்களின் விளைவாக **‘சமத்துவபுரம்’** என்கிற கருத்தினைக் கொண்டுவந்தார் கலைஞர். கிராமப்புறங்கள் மக்கள் ஒன்றிணைந்து வாழ்வதற்கான முயற்சியாக அவை இருந்தன.

தென்மாவட்டங்களில் தொழில் வளர்ச்சிக்கான ஆலோசனைகளை நாம் தந்தபோது, அதை ஏற்றுக் கொண்டு நீதியரசர் ரத்தினவேல் பாண்டியன் தலைமையில் குழு அமைத்துத் தொழில் வளர்ச்சிக்கு வழி ஏற்ப டுத்தினார்.

**கல்வி மானியம் இல்லை. ஏழை வீட்டுப் பிள்ளைகள் காலில் சலங்கை கட்ட நீங்கள் உதவ வேண்டும்’ என வேண்டுகோள் வைத்தோம். அதே மேடையில், ‘அதற்கு ஆணையிடுகிறேன்’ என்றவர் கலைஞர்.**

இப்படிச் சமூக அமைதி, நல்லிணக்கம், மக்கள் நல கோரிக்கைகளுக்காக அவரைச் சந்திக்கின்றபோதெல்லாம் அதை நிறைவேற்றிக் கொடுத்து, **‘மக்கள் நலமே முதன்மையான பணி’** என வாழ்ந்து காட்டியவர் கலைஞர்.

### விருதும் விருப்பமும்

கோவை குண்டுவெடிப்பின்போது சமூகப் பதற்றம் ஏற்பட்ட நிலையில், அமைதி நல்லிணக்கப் பணிகளில் நாம் ஈடுபட்டோம். அப்போது அளிக்கப்பட்ட கோரிக்கைகளுக்கும் உடனடியாக நிவாரணம் வழங்கியதுடன், நீதியரசர் கோகுல கிருஷ்ணன் தலைமையில் விசாரணைக் குழு அமைத்து உத்தரவிட்டார். அந்தப் பணிக்காக நமக்கு விருது அளிக்க விரும்பினார். அதற்காக அழைப்பு விடுத்தார். ஆனால், நாம் மறுத்துவிட்டோம்.

அதற்குப் பின்னர் எந்த விருதாக இருந்தாலும் நம்மிடம் கேட்கமாட்டார். அவரே அறிவித்துவிடுவார். **‘திருவள்ளுவர் விருது’, ‘கலைமாமணி விருது’** என அளித்து மகிழ்ந்தார். இதற்கெல்லாம் மேலாக அவர் பெயரில் உருவாக்கப்பட்ட **‘கலைஞர் விருதினை’** அண்ணா நூற்றாண்டு விழாவில் நாம் பெற்றோம்.

### தொல்லை இருக்குமா?

2002-ஆம் ஆண்டு. அப்போது கலைஞர் முதல்வராக இல்லை. ஒருநாள் காலை மடத்துக்கு கலைஞர் அழைக்கிறார். அன்று வேலையில் இருந்தவர் மடத்துக்குப் புதியவர் என்பதால், யாரோ கலைஞர் பெயரைச் சொல்லி விளையாடுகிறார்கள் என அழைப்பைத் துண்டித்துள்ளார்.

மூன்று முறைக்கு மேல் துண்டித்ததாக என்னிடம் வந்து சொல்ல, நாம் உடனே வாங்கித் திரும்ப அழைக்கிறோம். “யாரு அது புதுப் பையனா, கட் பண்ணிக்கிட்டே இருக்கான்” என விசாரித்துவிட்டு, **‘தொல்காப்பியப் பூங்கா’** நூல் வெளியிட வேண்டும் என அழைப்பு விடுத்தார். “நீங்கள் வருவதனால் தொல்லை வருமா?” என்றும் கேட்டார். “உங்கள் தமிழை நாம் பேசுவதால் எவ்வளவு தொல்லை வந்தாலும் அதை நாம் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம்” எனத் தெரிவித்தோம். அந்த நிகழ்ச்சியில் நாம் பேசிய உரையை அவர் மிகவும் சிலாகித்தார்.

### தமிழ்த் தொண்டு

மூத்த மொழி தமிழைச் செம்மொழி என அங்கீகாரம் கிடைக்கச் செய்வதற்கு அவர் காட்டிய முனைப்பும் காரணம். அதற்காக, 2005-ஆம் ஆண்டில் மதுரையில் பாராட்டு விழா நடத்தினோம். கலைஞர் அவர்களுக்காக நாமே அந்த நிகழ்ச்சியைப் பொறுப்பேற்று நடத்தினோம். அதியமான் அவ்வைக்கு நெல்லிக்கனி அளித்ததைப் போல, தமிழறிஞர்கள் சார்பில், அவருக்குத் தங்க நெல்லிக்கனி பரிசு வழங்கி நன்றி தெரிவித்தோம்.

திருக்குறள், திருவள்ளுவரை தமிழர் பண்பாட்டு அடையாளமாக மாற்றியதில் அவர் காட்டிய அக்கறை ஈடு இணையற்றது. அதற்காக, 2010-ஆம் ஆண்டில், உலகத் திருக்குறள் பேரவை சார்பில், நாம் அவருக்குத் **‘திருக்குறள் பேரொளி’** என்கிற விருதினை அளித்தோம். அதை அவரிடம் அறிவித்தோம். “இந்த விருது தேவையா?” எனக் கேட்டார். நாம் நமது ஆசை என்றோம்.

விழா மேடையில் பேசுகையில், “இந்த விருதினை எனக்கு வழங்க வேண்டும் என அடிகளார் ஆசைப்பட்டார். துறவிகளுக்கு ஆசை கூடாது; இருப்பினும் இந்த ஆசையை நிராகரிக்க முடியாது என்பதால் சம்மதம் தெரிவித்தேன்” என எங்களை மகிழ்வித்தார்.

திருச்சியில் ஒரு மாநாடு. கலைஞர் சிறப்புரை ஆற்ற வந்திருந்தார். கலைஞரின் ‘குறளோவியம்’ நாட்டிய நாடகமாக அரங்கேறியது. அதில் நாமும் கலந்து கொண்டு பேசினோம். அப்போது அவருக்கு ஒரு கோரிக்கை வைத்தோம். ‘திருச்சி கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரிக்கு அங்கீகாரம் இருக்கிறது. ஆனால், கல்வி மானியம் இல்லை. ஏழை வீட்டுப் பிள்ளைகள் காலில் சலங்கை கட்ட நீங்கள் உதவ வேண்டும்’ என வேண்டுகோள் வைத்தோம். அதே மேடையில், ‘அதற்கு ஆணையிடுகிறேன்’ என்றவர் கலைஞர்.

### கடவுள் ஏற்கும் வகையில்

மகா சன்னிதானம் அவர்களை சட்ட மேலவை உறுப்பினராக நியமித்தபோது, ஆதீனங்கள் எல்லாம் கலந்து கொண்ட பாராட்டு விழா சென்னையில் நடைபெற்றது. அப்போது ஏற்புரையாற்றிய கலைஞர், “நான் கடவுளை ஏற்றுக் கொள்கிறேனோ இல்லையோ, கடவுள் ஏற்றுக்கொள்ளும் வகையில் நான் செயல்படுகிறேனா என்பதுதான் முக்கியம்” என்றார். அவர் செயல்கள் அனைத்தும் அப்படித்தான் அமைந்தன.

ஒருமுறை குன்றக்குடி ஊர் தொடர்பாக, ஒரு கோரிக்கையை நமது ஊரிலிருந்து கொண்டு சென்றனர். கலைஞரைச் சந்திப்பதற்காகப் பலரும் காத்திருந்த வேளையில், அடிகளார் அனுப்பியவர் என, குன்றக்குடிப் பிரமுகர்களை முதலில் பார்த்துள்ளார். அவர்கள் நம்மைப் பார்க்க வந்தபோது அதைக் குறிப்பிட்டு மகிழ்ந்தனர். அடிகளார் அனுப்பியதால், கலைஞர் தனி அன்பு காட்டினார் என்று அவர்கள் மகிழ்ந்து குறிப்பிட்டனர். இப்படியான பல நிகழ்வுகளை நாம் கொண்டிருக்கிறோம்.

கலைஞரின் பவளவிழா மேடையில் பேசுகையில் நாம் குறிப்பிட்டோம். ‘அரியாசனங்கள் அறியா சனங்களால் வரலாம் போகலாம். ஆனால் கலைஞர் ஏந்திப் பிடிக்கிற கொள்கை சாசனத்தைக் காலம் ஒருநாளும் மறுதலிக்காது. அவர் ஏந்திப் பிடிக்கிற கொள்கை சாசனம் தீண்டாமை ஒழிப்பு, மத நல்லிணக்கம், தமிழ் மக்கள் அனைவரும் சாதி சமய எல்லைகளைக் கடந்து சமமாக, ஒற்றுமையுடன் வாழ வேண்டும் என்கிற கனவு. அது ஈடேற வேண்டும்” என வாழ்த்தினோம்.

அவர் காலம் வரை அந்தக் கனவுக்கு உழைத்தார். மத நல்லிணக்கமே அவர் வாழ்வின் உயிர்த் துடிப்பாக எப்போதும் இருந்தது. தமிழர்கள் ஒவ்வொருவரிடத்திலும், தமிழர் பண்பாடாக, மத நல்லிணக்கமாக கலைஞர் வாழ்ந்து கொண்டிருக்கிறார். தமிழாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

...பகிர்வார்கள்

## அகராதியில் சேருமா அந்தச் சொற்கள்?

2022-ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் நாடாளுமன்றத்தில் ‘ஜூம்லா ஜீவி’, ‘ஸ்னூப்கேட்’, ‘வினாஷ் புருஷ்’, ‘உழல்’ போன்ற சொற்களை எல்லாம் பயன்படுத்தக் கூடாது என்று சொல்லி, ‘நாடாளுமன்றத்தில் பயன்படுத்தத் தடை செய்யப்பட்ட சொற்களின் அகராதியில்’ அந்தச் சொற்கள் எல்லாம் சேர்க்கப் பட்டன.

ஆனால், அதெல்லாம் எதிர்க்கட்சிகளுக்கு மட்டும்தான் போல. சில நாட்களுக்கு முன்பு உத்தரப் பிரதேச அம்ரோஹா தொகுதியின் பகுஜன் சமாஜ் கட்சி எம்.பி. தானிஷ் அலி என்பவரை, பாரதிய ஜனதா கட்சியின் தெற்கு டெல்லி தொகுதி எம்.பி. ரமேஷ் பிதூரி என்பவர் ‘தீவிரவாதி’, ‘பயங்கரவாதி’ என்றெல்லாம் விமர்சித்திருக்கிறார். அதுவும் புதிய நாடாளுமன்றத்தில் அவை கூடிய ஒன்றிரண்டு நாட்களிலேயே இப்படி ஓர் உறுப்பினர் நடந்துகொண்டிருப்பது பெரும் விவாதத்தைக் கிளப்பியுள்ளது.

மணிப்பூர் கலவரம், சட்ட மசோதாக்கள் குறித்து பிரதமர் நரேந்திர மோடியைக் கேள்வி கேட்கும் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் தங்கள் பணியைச் செய்ததற்காக அவையில் இருந்து ‘சஸ்பெண்ட்’ செய்யப்பட, ரமேஷ் பிதூரி போன்றவர்கள் என்ன வசை பாடினாலும், அவரது சக கட்சி உறுப்பினர்கள் சிரித்து உற்சாகப் படுத்துவதோடு மட்டுமல்லாமல் அவர் மீது எந்த நடவடிக்கையையும் எடுக்காமல் வெறுமனே ‘அடுத்த முறை இப்படி நடந்துகொள்ளக் கூடாது’ என்ற எச்சரிக்கையோடு தப்ப வைக்கப்படுகிறார்கள். ‘ஜனநாயகத்தின் தாய்’ தலையில் அடித்துக் கொள்கிறாள்..!

## :.ப்ளாஷ்பேக்



### இறைவனுக்காக வாக்கு!

1996-ஆம் ஆண்டின் இறுதியில் தஞ்சை திலகர் திடலில் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் தலைவர் கலைஞர் அவர்கள் தஞ்சை நகர மன்றத் தேர்தலில் எனது தந்தை சி.இறைவன் அவர்களுக்குப் போட்டியிட வாய்ப்பளித்தார். அவரை ஆதரித்துப் பிரச்சாரம் மேற்கொண்ட தலைவர் கலைஞர், மேடையில் பிற வேட்பாளர்களின் பெயரை எல்லாம் வாசித்த பிறகு, “இப்படி மனிதர்களுக்காக வாக்குக் கேட்க வந்த நான் இன்றைக்கு இறைவனுக்காக வாக்குக் கேட்க வந்திருக்கிறேன்” என்று அவருக்கே உரிய தொனியில் குறிப்பிட்டார். தலைவர் கலைஞருடைய பேச்சானது அங்கு கூடி இருந்த கழகத் தோழர்கள் மற்றும் பொதுமக்கள் இடையே பசுமரத்தாணியைப் போலப் பதிந்துவிட்டது. இன்றும் பகிரப்பட்டு வருகிறது. அந்த மேடையில் நான் தலைவர் கலைஞருடன் எடுத்துக்கொண்ட புகைப்படம் இது.



இறை.கார்குழலி

**-இறை.கார்குழலி,
பிரச்சாரக் குழு முன்னாள் செயலாளர்,
மகளிர் அணி, தஞ்சாவூர்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம் பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### ஆன்மிகத் தலைவர்கள் வாழ்த்து!

**1971-ஆம் ஆண்டு ஜூலை 21-ஆம் தேதி, வெளிநாட்டுப் பயணத்தை முடித்துக் கொண்டு தமிழ்நாடு திரும்பினார் கலைஞர். அதற்காக அவருக்கு, கழகத்தின் சார்பில் வரவேற்புக் கூட்டம், கலைவாணர் அரங்கில் நடைபெற்றது. தமிழ்நாடு தெய்வீகப் பேரவையின் சார்பில், ஒரு பாராட்டுக் கூட்டமும் அதன்பின் நடத்தப்பட்டது. தருமபுரம் ஆதீனம், காஞ்சி ஞானப்பிரகாச ஆதீனத் தலைவர், குன்றக்குடி அடிகள், சுந்தரலிங்க அடிகள், திருவண்ணாமலை ராமநாத சுவாமிகள் ஆகியோர் கலந்துகொண்டு கலைஞரை வாழ்த்தினர்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 250




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131